ஸ்ரீ:

# வினைத்திரிபு விளக்கம்

(CONJUGATION OF TAMIL VERBS)

ஆக்கியோர்:

ராவ்ஸாஹிப்

மு. இராகவையங்கார்

★

பதிப்பாளர்:

நூலாசிரியர் மைந்தரும்
மாநுமதுரை வக்கீலுமான
எம். ஆர். நாராயணையங்கார்

[நூலாசிரியரது எண்பதாம் ஆண்டுநிறைவு ஞாபக வெளியீடு]

விளம்பிஹூ ஆடிமீ உஎஉ

1958

# வினைத்திரிபு விளக்கம்

(Conjugation of Tamil Verbs)

★

ஆக்கியோர் :

ராவ்ஸாஹிப்

**மு. இராகவையங்கார்**

★

பதிப்பாளர் :

நூலாசிரியர் மைந்தரும்

மானாமதுரை வக்கீலுமான

**எம். ஆர். நாராயணையங்கார்**

[நூலாசிரியரது எண்பதாம் ஆண்டுநிறைவு ஞாபக வெளியீடு]

**விளம்பி௵ ஆடி௴ ௨௭௳**

**1958**

முதற் பதிப்பு : 1958.

விஜயா பிரிண்டர்ஸில்
அச்சிடப் பெற்றது.



ஸ்ரீ:

# பதிப்புரை

இன்று, என் தந்தையாரின் எண்பதாம் ஆண்டு நிறைகின்ற நன்னுளாகும். இத் திருநாளை விசேடமாகவே கொண்டாட நாங்கள் விரும்பினோம். தமிழ்ப் புலமை வாய்ந்த எங்கள் குடும்பத்தில் இவர்கள் ஆற்றிய அரும்பெரும் பணிகளும் அவற்றால் தமிழாராய்ச்சித்துறை யடைந்த பயன்களும் பெரிதும் பாராட்டத் தக்கன வன்றோ? ஆனால், இப் பிறந்த நாட் கொண்டாட்டத்தைப் பெரியதொன்றாக்கி நடத்த என் பிதா அவர்கள் விரும்பவில்லை.

ஐம்பத்தைந்து ஆண்டுகளாக என் தந்தையார் ஆற்றி வரும் தமிழ்த் தொண்டுகளை அறிவுடைய தமிழுலகம் நன்கறியும். அவற்றை இங்கே விவரிக்க வேண்டியதில்லை. சுருக்கமாகக் கூறுமிடத்து, தமிழிலக்கிய இலக்கண சரித்திர ஆராய்ச்சித் துறைக்குத் 'தந்தைபோன்றவ' ரென்றும் 'மார்க்கதரிசி' என்றும் தமிழ்ப் பேரறிஞர்கள் கூறிவருவதையே நாமும் இங்கு எடுத்து மொழிதல் தகும்.

இவர்களது 55-ஆண்டுத் தமிழ்த் தொண்டில், முதற் பன்னிரண்டாண்டுகள் மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திராசிரியத் தலைமையிலும், அடுத்த 26-ஆண்டுகள் சென்னை யூனிவர்ஸிடியில் நடந்தேறிய தமிழ்ப் பேரகராதிப் (Tamil Lexicon) பணியிலும், பின் 7-ஆண்டுகள் திருவிதாங்கூர்ச் சருவகலாசாலைத் தமிழ்ப்பேராசிரியர் பதவியிலும் சென்றன. பின்பும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போன்ற கல்விக் களங்களில் ஆற்றிய தொண்டு போற்றத்தக்கதாம். இப்போது இவர்கள் ஓய்வெடுத்துக்கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். இக்காலங்களிலெல்லாம் தமிழாராய்ச்சித்

துறைக்கு இவர்கள் புரிந்துவந்த அருந்தமிழ்ப் பணிகளை யாவருமே நன்கறிவர். இவர்கள் இயற்றிய நூல்கள் மூல மும், கட்டுரைகள் மூலமும் வெளிவந்துள்ள கருத்துக்களும் கொள்கைகளும் புதுமை பெருமைகள் கொண்டு, நல்லறி ஞர் பல்லோருடைய போற்றற்கும் புகழ்ச்சிக்கும் உரியவாக உள்ளன. இவை, தமிழ்ப் பெரியோர்களும் அறிஞர்களும் அவ்வக்காலத்தே எழுதிவந்த கடிதங்களால் நன்கு விளங் கும். அவற்றுட் சிலவற்றை இவர்கள் வெளியிட்டுள்ள நூல் கள் வாயிலாக யாவருமே நன்கறிவர்.

சென்னையில் நீண்டகாலம் வாழ்ந்த என் தந்தையார் வாழ்க்கையில்—மங்கலமாக அகர எழுத்து முதல் தொடங்கி 'கலியாணம்' என்று இறுதியில் மங்கலமாக நன்கு முடிந்த— தமிழ்ப்பேரகராதி (Tamil Lexicon) யின் ஆறு தொகுதிகளா லும் அவற்றின் பிற்சேர்வாலும் தமிழுலகம் அடைந்துவரும் பயன்கள் அளவிடமுடியா. நீண்டகாலம்நடந்த இப் பெரும் பணியை ஆதிமுதல் தொடர்ந்திருந்து நிறைவேற்றி வைத்த வருள் என் தந்தையாரே முதல்வராவர். இத் தமிழ்த் தொண் டில் இவர்கள் ஈடுபட்டிருந்தபோது, அவ்வகரா தியின் உதவிக்கென்று இவர்கள் சொந்தமாகச் செய்துவைத் திருந்த அருஞ் செயல் இரண்டுண்டு. ஒன்று 'நிகண் டகராதி' என்பது (அச்சிடப்படவில்லை). மற்றொன்று வினைத் திரிபுகளின் விளக்கமாகும். இவற்றுள் முன்னது, திவா கரம், பிங்கலந்தை, சூடாமணி, உரிச்சொல் முதலிய நிகண்டுகளில் வழங்கும் சொற்கள் யாவும் தமிழ்ப் பேரக ராதியில் ஏறவேண்டி, அகரமுதலாக வரிசைப்படுத்திய தோர் சிற்றகராதியாகும். இதுபற்றிய விளக்கத்தை 'ஆராய்ச்சித் தொகுதி' என்ற நூலுட் காணலாம்.

மற்றொன்று, அப் பேரகராதிப்பணியின் பயனாக முடிந்த வினைத்திரிபுகளின் விளக்கம், தமிழ்மொழியில் வழங்கும் வினைப்பகுதிகளின் தனிப் போக்கையும் இலக்கண வமைதி யையும் விளக்குவது. இவை பற்றிய குறிப்புக்களும்,

முடிபுகளும் நெடுங்காலமாகவே என் தந்தையாரிடம் இருந்தன. அவற்றைத் தொகுத்து ஓர் இலக்கண மாக்கியும், பின்பு குறிப்புக்களுடன் சூத்திர உருவத்தில் தனி நூலாக்கியும் பல்லாண்டுகட்கு முன்பே இவர்கள் அமைத்திருந்தார்கள். அவற்றையே புதுப்பிக்கச் செய்து இந்த *நன்னுள் நினைவு மலராக* இப்போது வெளியிடு கிறேன். இச் சிற்றிலக்கண நூல் தோன்றிய காரணமும், வரலாறும் இதன் முன்னுரையுள் ஆசிரியரால் நன்கு எழுதப் பட்டுள்ளன. அவற்றைப் படிப்போர்க்கு, இத்தகைய நூலொன்று தமிழ்மொழிக்கு இன்றியமையாதது என்பதும், அறிஞர்க்கு ஒரு நல்விருந்தாம் என்பதும் தாமே போதரும்.

இந்நூற் பதிப்பினைப் பிழையறப் பரிசோதித்து உரிய காலத்தில் வெளிவரும்படி செய்து உதவியவர், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பல்லாண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகவும், செந்தமிழ்ப் பத்திராசிரியராகவும் விளங்கிய தம் தந்தையார், குலபதி திரு, *நாராயணையங்கார் ஸ்வாமி* போலவே—தாமும் அவ்வாசிரியத் தலைமைகள் தாங்கி இப்போது ஓய்வு பெற் றுள்ள வித்வான் திரு, *அப்பனையங்கார் ஸ்வாமி* யாவர். என் விருப்பிற்கிணங்கி இப் பேருதவிபுரிந்த இவர்கட்கு என் உள்ளார்ந்த வந்தனங்களையும் நன்றியையும் தெரிவித் துக் கொள்ளுகிறேன்.

**விளம்பிஞு**
**ஆடிமீ 27உ**
11—8—1958.

***நாராயணையங்கார்***
*மானமதுரை.*

# உள்ளுறை

பக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | நூன்முகம் | 9 |
| 3. | நூல் | 31 |
| 4. | வினைப் பகுதிகளின் விவரக் குறிப்பு | 49 |
| 5. | வினைப் பகுதிகள் பற்றி அறியத்தகும் சில குறிப்புக்கள் | 50 |
| 6. | வினைப் பகுதி அட்டவணை | 53 |

ஸ்ரீ

# முன்னுரை

சென்னை 'யூனிவர்ஸிடியார்' நடத்தி வந்த தமிழ்ப் பேரகராதி வேலையில் 1913ம் ஆண்டுமுதல் நான் தலைமைப் பண்டிதனாக நியமனம் பெற்றபின், அவ் வகராதி நடைபெறுதற்கு வேண்டிய முறைகளும் திட்டங் களும் அதன் 'கமிட்டி'யாரால் வகுக்கப் பெற்றன. அக்கமிட்டிக்குத் தலைவராகவும் பதிப்பாசிரியராகவும் ஆதி யில் நியமிக்கப் பட்டவர், ரெவரண்ட்: டாக்டர் J. S. சாண்டலர் துரையவர்கள். அதன்பூர்வாங்க வேலைகள் அப்போது மதுரையில் நடந்து வந்தன. பின் 1915-ம் ஆண்டு அவ்வகராதி-ஆபீஸ் சென்னைக்கு மாற்றப்பட்டது.

கமிட்டியார் வகுத்த முறைப்படியே புதிய பேரகராதி, ரெவரெண்டு வின்ஸ்லோ துரையால் இயற்றி 1862ல் வெளியிட்டிருந்த தமிழ் – இங்கிலீஷ் அகராதியை அடிப்படையாகக் கொண்டு, நெடுங்கணக்கு முறையில் சொற்களை அமைத்துத் தொகுக்க வேண்டும் என்பது நியதியாகும். அம் முடிவின்படியே வின்ஸ்லோ அக ராதியை வைத்துக் கொண்டு வேலை தொடங்கியது. அப் போது, வினைச் சொற்களை அமைக்கும் முறையும் ஆரா யப்பட்டது.

முதலில் வந்த 'அகல்—தல்' என்ற வினைச் சொல்லின் பொருளை விவரிப்பதன் முன் 'அகல்கிருன் அகன்ருன் அகல்வான்' என்ற மாதிரிகையில், ஒவ்வொரு வினைச்சொல்லும் முக்காலங்களிலும் வரும் முறை அவ் வகராதியில் காட்டப்பட்டிருந்தது. இவ்வாறு காட்டியதன் நோக்கம், வினைப்பகுதிகள் காலங் காட்டுங்கால், பல் வகை மாறுபாடுகளை அடைந்து வருதலால் அவற்றைத் தெளிவிக்க வேண்டும் என்பதேயாம். எந்த பாஷையிலும் வினைச்சொன் முடிபுகளை அறிவதில் இடர்ப்பாடுகள் பெரிதும் உண்டு. குழந்தைப் பருவ முதலே அவ்வம் மொழிப் பழக்க முள்ளவர்கட் கன்றிப் புதியதாகப் பிறமொழி கற்க விரும்பும் புறநாட்டவர்க்கு அது மிகக்கடினமான தென்பது அறிஞர் அறிந்ததே. நன்னூலார் காட்டிய 'நட வா மடி சீவிடு கூ வே வை' என்ற வினைப் பகுதிகளை நோக்கு மிடத்து இது தெளிவாக விளங்கும். இதனுள் ஒவ்வொரு வினைப் பகுதியும் முக்காலங்களுள் ஒரு காலத்திலோ பல காலங்களிலோ மாறுபாடு உடைய பகாப்பத மாதலைக் கண்டறியலாம். மொழியிற் புதுப்பயிற்சி பெறுவோர்க்கு அவற்றை அறிந்து பயில்வது அரிதே யன்ருே? அத ஞல், இதற்கெல்லாம், விரிவாக மேற்காட்டிய வின்ஸ்லோ முறையை மாற்றி, புதிய சுருக்கமுறை ஒன்றைக் கண் டறிய ஆராய்ச்சி அவசிய மாயிற்று, அப்போது, தமிழ்த் தாதுக்களான பகுதிகளில் 300–வினைகளைத் தொகுத்துக் கொண்டு அவை முக்காலங்களிலும் செல்லு முறையை நோக்கலானேன். ஏதோ ஒருவகையில் அவற்றுள் ஒற் றுமை அமைந்திருத்தலையும் அவற்றை விதிவகுத்து ஒழுங்குபடுத்த இயலும் என்பதனையும் காண நேர்ந்தது. பின் தமிழிலுள்ள எல்லா வினைச் சொற்களும் தொகுத்து ஆராயப் பெற்றன. இம் முயற்சி நடைபெற்று வரும் போது தரங்கம்பாடிப் பதிப்பான தமிழ் – இங்கிலீஷ் டிக்

ஷனரி ஒன்று கிடைத்தது; இது கிறிஸ்தவ மிஷனரி மாரால் கி-பி. 1877ல் பதிப்பிடப் பெற்றது. இப் புத்தக முகப்பில் டாக்டர் கிரால் (Dr. Graul) என்பவரால் வினைவிகற்பங்கள் பற்றி வரையப்பட்டிருந்த குறிப்பு ஒன்றும் வெளியிடப்பட்டிருந்தது.* இஃது எனக்குப் பெரிதும் உவப்பு ஊட்டியது. ஆனால், வினைத்திரிபுகளுக்கு அத் துரையவர்கள் கொண்ட இலக்கணம் நான் கண்டவற்றுடன் பல வகையில் வேறுபட்டதே எனலாம். ஒலி வேற்றுமைகளை – வல்லோசை இடையோசை மெல்லோசை என மூவகைப் பெரும் பிரிவாகவும் ஏழு வகையாகவும் வகுத்துக் கொண்டு, எழுத்து வகைகளால் அவை மாறுபட்டு வருவதைத் துரையவர்களின் குறிப்புக் காட்டுவதாகும். இஃது ஐரோப்பியர் போன்ற அந்நிய நாட்டார்க்கு மிகுதியாக உதவக்கூடியதே. அதிலும் குறைகள் இல்லாமற்போகவில்லை. அவற்றை இங்கே விரிக்க வேண்டியதன்று. அதனால் பொதுவும் சிறப்புமான மூல விதிகள் அமைந்த தமிழ் இலக்கணம் ஒன்று வினைத் திரிபுகளுக்குப் பெரிதும் வேண்டத்தக்கது என்பதிலே என் மனம் முனைந்தது. ஆகவே, பழைய இலக்கிய இலக்கண நூல்களைத் துணைக்கொண்டு ஆராயலானேன். அவ்வாராய்ச்சியின் பயனே, இச் சிறு நூல்.

திராவிட பாஷைகளான தெலுங்கு, கன்னடம், மலையாள முதலிய மொழிகளின் ஒற்றுமை வேற்றுமைகளை

---

* Classification of Tamil Verbs according to their conjugation— இதன் விவரமறிய வேண்டி, தமிழறிஞரும் என் நண்பருமான தஞ்சைத் திருவாளர் ௺. கந்தசாமிப் பிள்ளையவர்களை ஒருகால் இதுபற்றி உசாவியபோது, தாம் டொ. கிரால் துரைமகனாரது குறிப்பைப் படித்ததுண்டென்றும் அதுபற்றிப் பின் எழுதியனுப்புவதாகவும் தெரிவித்து, அதன்படி சமீபத்தில் அக்குறிப்பை அன்புடன் அனுப்பியும் உள்ளார்கள். அவர்கட்கு என் நன்றி பெரிதும் உரியதாகும்.

ஆராய்வதற்குத் தமிழின் பழைய தாதுபாடம் (வினைப் பதங்களின் தொகுதி) மிகமிக அவசியமானது. அத் தாதுக்களிலிருந்தே பெரும்பாலான பெயர்ச்சொற் களும் வினைவிகற்பங்களும் பிறந்து விரிகின்றன. ஆகவே அவற்றைத் தொகுக்கும் போது, உலக வழக்கினும் செய் யுள் வழக்கினும் வழங்கும் முதனிலைகள் மூவாயிரத்துக் கும் மேற்படுவன ஆகின்றன. இவையாவும் பன்னிரு வகையுள் அடங்குதல் பெரிதும் மகிழ்வூட்டுவதாகும். **டாக்டர் கிரால்** துரை காட்டிய வாய்பாடுகளையே, கருத் தொற்றுமையால் நாமும் பெரும்பான்மை இதற்குக் கொள்ளலாம். இப்பகுப்பினுட் சில வினைப் பகுதிகள் ஆயிரத்துக்குமேல் அமைந்துள்ளன. சில நூற்றுக்கு மேற்பட்டனவும் வேறு சில அதற்குட் பட்டனவு மாகும். அப்பன்னிரு பகுப்பாவன:—

| | | | |
|---|---|---|---|
| 1. | செய் | 7. | உண் |
| 2. | ஆள் | 8. | தின் |
| 3. | கொல் | 9. | கேள் |
| 4. | அறி | 10. | கல் |
| 5. | அஞ்சு | 11. | பார் |
| 6. | நகு | 12. | நட |

என்பவை. இவ் வாய்பாடுகளுள் அடங்கியுள்ள ஆயிரக்கணக்கான பகுதிகள், தமிழின் ஆதி தாதுக்களே என்று சொல்வதற்கு இல்லை. இவற்றினும் சுருங்கி நின்ற மூல தாதுக்களினின்றே இவற்றுட் பல வினைகள் உண்டாயிருக்கவேண்டும். 'அத்தாதுக்கள் இத்தகையன' என்பதனையும் குறிப்பிப்பவர் போலப் பவணந்தி யடிகள் ஈரெழுத்துக்கு மேற்படாமல் 'நடவா மடிசீ' என்று, ஒரு சீர் உடைய பகாப்பதங்களாகவே கூறிச் செல்லுதல் காணலாம். இவற்றினின்று தோன்றியனவே பழைய

பெயர்ச் சொற்களான நிலம் மரம் முதலியன. 'மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா' (தொல்) என்ற பழஞ் சூத்திரங் கொண்டு இவற்றை இடுகுறிப் பெயர்கள் என்றே கொள்வாராயினர் பின்னோர். ஆனால் இக் காலத்து மொழிநூல் வல்லார் அவற்றின் காரணங்களை யும் ஆய்ந்தறிய முனைவாராயினர்.

இவ்வாராய்ச்சித் துறையுள் நான் இறங்கவில்லை. இத்தகைய முயற்சி, இந்நூலுக்கு அவசியமானது மன்று. இப்போது நான் மேற்கொண்ட தெல்லாம், உலக வழக் கினும் செய்யுள் வழக்கினும் பயிலும் தமிழ் வினைகள் யாவும் திணை பால்களிலே முக் காலங்களிலும் மாறுபட்டு நிற்கும் முறைகளை ஆராய்வதே யாகும்.

இம்முறையில், சங்க கால முதல் இந்நாள் வரை வழங்கும் செய்யுளும் வழக்குமாகிய வினைச் சொற்கள் யாவுமே எடுத்துக்கொள்ளப்பட்டன. இதற்குச் சென்னை 'யூனிவர்ஸிடி'யார் பதிப்பித்துள்ள தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) யையே ஆதாரமாகக் கொள்ளலா னேன். பிற்காலத்தனவும் இழிந்தோர் வழக்குமான வினைப்பகுதிகளும் வினை வேறுபடுமாற்றைத் தெரிந்து கொள்ளுதற்கு உரியனவாதலால் — அவைகளும், இந் நூலுள் எடுத்தாளப்பட்டன. தமிழில் வழங்கும் எல்லா வினையடிகளும் பெரும்பாலும் எடுக்கப்பட்டுள்ளன என் பது, இந்நூலின் அனுபந்தமாகச் சேர்க்கப்பெற்ற பகுதி-அட்டவணைக் குறிப்பால் அறிந்து கொள்ளலாம்.

மேற்காட்டிய பன்னிருவாய்பாடுகளுள் அடங்காதன வும் சில உண்டு. அவை 'ஒழிபு' என்ற பகுதியிற் சேர்த்துக் காட்டப்பட்டன. வாய்பாடுகளில் அடங்கியன யாவும் இருதிணை ஐம்பால் மூவிடங்களிலும் இடைநிலை விகுதிக

ளுடன் கூடி நடைபெறும்போது ஒத்த முறையில் ஒரு நெறிப்பட்டுச் செல்வதைப் பெரிதுங் காணலாம். இவ்வாறு நெறிப்பட்டுச் செல்வது தமிழ் மொழியின் ஆதி இயற்கை யமைதியின் செம்மையைக் காட்ட வல்லது.

வடமொழியிலுள்ள மூவாயிரத்துக்கு மேற்பட்ட மூல தாதுக்களை எல்லாம் பத்துப் பிரிவுக்குள் அடக்கி இலக்கணம் வகுத்தனர் பாணினி பகவான். இப்பிரிவுகள் **விகரணம்** எனப்படும். விரிந்து பரந்த அப் பெரு மொழியை அவ்வாறு சுருக்கி அமைத்தது, அம்முனிவரது பேராற்றலைப் புலப்படுத்துகின்றது. ஏனைய உண்ணாட்டு மொழிகளிலும் புறநாட்டு மொழிகளிலும் இங்ஙனம் வினைத்திரிபு முறைகளைச் சுருக்கி இலக்கணம் வகுத்த பெரியார் அரியர் என்றே சொல்லலாம். தமிழும் அத் தகைய மொழிகளில் ஒன்ருகக் கருதப்பட்டது என்பது, முன்னேரான நூலாசிரியர் உரையாசிரியர் எழுத்துக்க ளாலும் புலனுகின்றது.* ஆனல் தமிழ்ப் பேரகராதிப் பணியில் நான் ஈடுபட நேர்ந்தபோது, நம் மொழியில் வினைத்திரிபுகள் சுருங்கியும் தமிழிலக்கண வரம்புக்கு உட்பட்டும் ஆதிமுதலே அமைந்தவை என்பது புலனு யிற்று. பாணினி முனிவர்க்கு வடமொழி போலவே அகத்தியனுர்க்குச் சிவபிரானுல் அருளப்பட்ட ஆதிமொழி

---

* *வினைத்திரிபுகள் நிகழ்தற்கிடமான கால எழுத்துக்களைப் பற்றிக் கூறுமிடத்தில் – "முக்காலத்தும் வருதற்குரிய காலங் காட்டும் எழுத்துக்களை ஆசிரியர் எடுத்தோதாராயினர்; பின் னுள்ளோர் காலங்கட்கு உரியனவாக எடுத்தோதிய எழுத் துக்கள் தம்முள் மயங்கியும் வருதலின்" என, நச்சினர்க்கினியர் கூறுதலுங் காண்க. (தொல், சொல், உரை.)*

தமிழ் என்ற ஆன்றோர் கூற்றும் இங்கு அறிந்து போற்றத்தக்கதாகும்.

சென்னைச் சர்வகலா சங்கத்தாரால் தமிழ்ப் பேரகராதி அச்சிடத் தொடங்கியதிலிருந்தே மேற்காட்டிய வினைத்திரிபுகளின் வாய்பாட்டெண்கள் என்னால் காட்டப்பட்டு வந்தன. இதனால், வின்ஸ்லோ முறையிலன்றி, குறிப்பெண் அளவே கொண்டு வினைகள் யாவும் சுருக்கம் பெறலாயின. எனினும், அவ்வெண்ணுக்குரிய பகுதிகள் அல்லது தாதுக்கள்பற்றி நேரக்கூடிய ஐயங்கள் நீங்கவும் விவர மறியவும் மக்கள் விரும்புவது இயல்பேயாம். ஆகவே அவற்றை எளிதில் அறிதற்குரிய முறையில் விதிகள் வகுத்துக்காட்டுவதும் இன்றியமையாததாயிற்று. அங்ஙனம் வகுப்பதில் அதிக வருத்தமுமில்லை. தமிழ் மொழியின் ஆதி இயற்கைப் போக்கு அத்தகைய தாகும். இலக்கணம் வகுக்கும் போது, தாமே நெறிகளைக் காட்டிக் கொண்டு விதிகள் அமையலாயின.

பன்னிரு வகையாக வுள்ள இவ் வினையடிகளின் வேறுபாடுகளை **வினைத்திரிபு** என்ற பெயரால் வழங்கல் ஏற்புடையதாகும். இவ்வாறே அறிஞர் சிலரும் வழங்கியுள்ளார். ஆகவே **வினைத்திரிபு விளக்கம்** என இதற்குப் பெயரிடப்பட்டது.

---

* வடமொழி விகரணங்களின் போக்கும், தாதுக்களின் நிலையும் வேறுபாடுடையவாயினும் அவற்றின் தொகையளவுகளில் வடமொழியோடு தமிழ் மொழி பெரும்பாலும் ஒத்துச் செல்வது—''வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத் தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந் தொழுதேத்தும் குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்'' (காஞ்சிப் புராணம்) என்ற பின்னோர் வாக்கை இங்கே நினைப்பூட்டுகின்றது.

இந்நூலின் விதிகளை **நூற்பா** வகையில் சிறுசிறு சூத்திரங்களாக அமைப்பது, கற்பார்க்கு உதவியாம் என்று அன்பர் சிலர் விரும்பினர். அவர்கள் விருப்பின் படியே நூலை இயற்றிவரும்போது ஐம்பத்தொன்பது சூத்திரங்களில் நூலின் விதிமுறைகள் அமையலாயின. அடுத்துவரும் **நூன்முகம்** என்ற கட்டுரையில் நூலின் கருத்துக்கள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. அதனால், சூத்திரங்கட்கு விரிவுரை தாராமல் குறிப்புக்களே பெரும் பாலும் அமைக்கப்பட்டன. விளக்கம் வேண்டுமிடத்து அந்நூன்முகத்தில் உரிய விடங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

நூலையடுத்து, பன்னிரு வாய்பாட்டுள் வரும் **வினைப்** **பகுதிகளை** அதனதன் ஈற்றெழுத்து முறையே அகராதி வரிசையில் அனுபந்தமாகத் தந்துள்ளேன். அப்பகுதி கள் யாவும் “யூனிவர்ஸிடி” தமிழ்ப் பேரகராதியிலிருந்து எடுக்கப்பட்டவை. அவ்வினைப்பகுதிகளின் பொருள்கள் விரிவஞ்சித் தரப்படவில்லை. விரும்புவோர் அப்பேரகராதி மூலம் மேற்கோள்களுடன் அறிந்துகொள்க.

இந்நூலை இயற்ற நேர்ந்து பல்லாண்டுகளாகியும், சிலகாரணங்களால் பதிப்பிட்டு வெளியேற்றக்கூடவில்லை. என் முதுமை நிலையில் அன்பர் சிலர் தூண்டுதலால் இப்போதேனும் வெளியிட நேர்ந்ததுபற்றி மகிழ்கிறேன்.

இச்சிறு நூலுக்கும் பதிப்புக்கும் வேண்டிய உதவி களை என்னுடனிருந்து புரிந்து வந்தவர், இந்நகர் ஒக்கூர் வெள்ளையன் செட்டியார் உயர்தரக்கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் **ஸ்ரீ வே. இராமநாத ஐயரவர்களாவர்**;இவர் கட்கு என் மனமார்ந்த நன்றியும் ஆசியும் உரியனவாகுக.

மானாமதுரை.
*15—1—58*

இங்ஙனம்,
***மு. இராகவையங்கார்.***

ஸ்ரீ

# நூன் முகம்

## மொழிகளின் அமைதியும் முன்னூல் பின்னூல்களும்

தமிழ் மொழியில் வழங்கும் நால்வகைச் சொற்களுள்ளே பெயர் வினை இரண்டும் முற்பட்டவை என்றும், இடை உரி இரண்டும் அவற்றின்வழித் தோன்றியவை என்றும் கூறுவர் தொல்காப்பியனார். பெயர் வினைகளைப் பற்றி அவ்வாசிரியர் இருவகை வழக்குக்களையும் அறிந்து கூறிய இலக்கணங்கள் பெரும்பான்மை பழமையானவையும் அக்கால வியல்புக் கேற்றவையு மாகும்.

பிற்காலத்தில் பவணந்தி என்னும் புலவர் பெருமான் தோன்றி, அப் பழைய விதிகளை ஆராய்ந்து, தம் காலநிலைக் கேற்ற முறையில் புதிய இலக்கணம் வகுப்பாராயினர். அவற்றை அவரியற்றிய நன்னூலுள் பல இடங்களிற் காணலாம். அவற்றுட் பதவியல் என்பதும் ஒரு பகுதியாகும். அதனுள் அவர் வகுத்துரைத்த விதிகள் பெரும்பாலும் புதிய முறைகளை உடையன. பெயர் வினைச் சொற்களின் இயல்புகளை அறிந்து அவற்றைப் பகுபதம் பகாப்பதம் என இருபகுதிகளாக்கி, அவற்றுட் பகுபதத்தைப் பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் என்ற ஆறு பிரிவுகளாக வகுத்து விரித்துச்

செல்வர் அவர். இப் பகுப்பு முறை முன்னோரான ஆசிரியர்களாற் கூறப்படாது போயினும், வடநூல் விதிகளைப் பெரிதும் தழுவிய தென்பர். பதவியல் என்ற பெயரையும், சாரியை நீங்க, பகுதி விகுதி இடைநிலை சந்தி விகாரம் என்ற ஐந்து பிரிவுகளையும் புதியனவாக அமைத்து இலக்கணம் வகுத்துக் கொண்டவர் நன்னூலாரே யாவர். ஏறக்குறைய இவர் காலத்தவராகிய குணவீர பண்டிதர் என்பார் தாமியற்றிய நேமிநாதம் என்னும் சின்னூலுள்ளும் மேற் கூறிய இயலின் பெயரையேனும், பகுதி விகுதி இடைநிலை சந்தி விகாரம் என்னும் பெயர்களையேனும் அவற்றின் விதிகளையேனும் கூறாமை குறிப்பிடத் தக்கது.

பெயர் வினைகளின் பதமுடிபுகளைப் பதவியலுள் காட்டி வந்த நன்னூலார், பெயர் முடிபுக்குப் பின் வினை முடிபு கூறத் தொடங்கி முதலில் பகுதிகளையும் பின் விகுதிகளையும் அவ்விரண்டிற்கும் நடுவில் வரும் இடைநிலை முதலியவற்றையும் விரித்து விளக்குகின்றார்.

## தெரிநிலை குறிப்பு வினைகள்

வினைச் சொற்கள் பொருள்களின் புடை பெயர்ச்சியை உணர்த்துவனவாய் வேற்றுமைகளை ஏற்காது, செய்பவன் கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்ற ஆறனையும் தருவனவாம். இவ்வாறனையும் வெளிப்படப் புலப்படுத்துவதனை வினை என்றும், குறிப்பிற் புலப்படுத்துவ்தனைக் குறிப்புவினை என்றும் கூறுவர் தொல்காப்பியனார். முன்னதான வினையைத் தெரிநிலை வினை என்று வழங்கினர் பவணந்தியார். இவ்வாறு வெளிப்படையும் குறிப்புமான வினைகள் காலவெழுத்துக்களை இடையிற் பெரும்பாலும் பெற்றும் சிறுபான்மை பெருமலும் வருதலாற் புலப்படுவன.

## வினைச்சொற்களின் ஈற்றெழுத்துக்கள்

இவற்றுள் செய்பவன் முதலிய ஆறும் புலப்பட நிற்கும் தெரிநிலை வினையின் முதனிலையான பகுதிகள், பன்னிரண்டு உயிர்களையும் ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்ற பதினொரு மெய்களையும் குற்றியலுகரத்தையும் ஈற்றிற்கொண்ட பகாப்பதங்களாகும். இவற்றை நன்னூலார்:—

"நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளஉரிஞ் உண்பொருந் திரும்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கேள் அஃகென்
றெய்திய விருபான் மூன்றா மீற்றவுஞ்
செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே"

என்பதனால் உணர்த்தினர்.

### விகுதிகள்

மேற்கூறியவாறு இருபத்துமூன்று எழுத்துக்களையும் ஈற்றிற்கொண்ட பகுதிகள், திணைபாலிடங்களை உணர்த்துமிடத்து விகுதிகளை வேண்டுகின்றன. அவ்விகுதிகளை நன்னூலார்:—

"அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்மார்
அஆ குடுதுறு என்ஏன் அல்அன்
அம்ஆம் எம்ஏம் ஓமோ டும்மூர்
கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்
ஈயர் கயவும் என்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே"

எனக் கூறியுள்ளார். இவை ஐம்பான் மூவிடங்கட்கும் உரியவாமாறு கற்றோர் யாவரும் நன்கறிவர். இவ்விகுதிகள் இருவகை வினைகட்கும் பெயர்கள் சிலவற்றிற்கும் பொதுவானவை.

## இடைநிலைகள்

பகுதி விகுதிகட்கு இடையே முக்காலங்களையும் வெளிப்படுத்தி ஐம்பான் மூவிடங்களிலும் வருவன, கால இடைநிலைகளாம். இம்முக்காலங்களுள்,

1. நிகழ்காலத்துக்கு—கிறு, கின்று, ஆநின்று என்பன இடைநிலைகள்;

2. இறந்த காலத்துக்கு — த், ட், ற் என்ற ஒற்றுக்களும், இன் என்பதும் இடைநிலைகள்;

3. எதிர் காலத்துக்கு — ப், வ் என்ற ஒற்றுக்கள் இடைநிலைகள் என்பர் நன்னூலார்.

இவற்றுள் கிறு என்ற இடைநிலை உலக வழக்கிற் பெரிதும் பயில்வது. கின்று, ஆநின்று என்பவை — பெரும்பான்மை செய்யுள் வழக்கில் வழங்குவன. இம்முக்கால இடைநிலைகளும் தொல்காப்பியனார் காலத்து வழங்கின வல்ல. ஆயினும் அவ்வாசிரியர் 'உம்' என்ற சொல்லையே நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் உரியதாகக் கொள்வர். (தொல். வினை, 38)

### நிகழ்கால–ஆநின்று என்ற இடைநிலை

இனி, ஆநின்று என்ற இடைநிலையுள் நில் என்பது 'செய்யா' என்ற வினையெச்ச வாய்பாட்டுச் சொல்லை அடுத்துவரும் என்பர் தொல்காப்பியப் பழைய உரைகாரர்கள். 'உண்ணா நின்றான்' என உதாரணம் காண்க. இஃது உண்டு நின்றான், உண்ணாமல் நின்றான் என இரு பொருள் படுமாதலால், நில் என ஓர் இடைநிலை கொள்ளாமல் ஆநின்று என்பதே நிகழ்கால இடைநிலை என்று கொண்டார் நன்னூலார். இஃது உண்ணாநின்றான்,

உண்ணுநிற்கிருன், உண்ணுநிற்பான் என வேறு காலங்களை ஏற்காது, நிகழ்கால மொன்றுக்குமே உரியதாம் என்பது அவர் உட்கோள்.

## இறந்த காலங்காட்டும் இடை நிலைகள்

நன்னூலார் கூறியவாறு, தகரமும், டகரமும், றகரமும் இறந்தகால எழுத்துக்களாயினும் அவற்றுள் டகர றகரங்கள் தகர இடைநிலையின் திரிபேயாகும். அதனுல் தகர வொற்று ஒன்றுமே, இறப்பில் வருந் தனியிடைநிலையாகக் கொள்ளத் தகும். ஆயினும், ஆள் கேள் என்ற பகுதிகளிரண்டும் கொல் கல் என்ற பகுதிகளிரண்டும், ஆண்டான் கேட்டான் எனவும் கொன்ருன் கற்ருன் எனவும் இறந்த காலத்தில் தகரம் முற்றுந் திரிந்து நடத்தலானும், இதற்குத் தக்க காரணங்கூறல் அரிதாதலானும் தனித்தனி வாய்பாடுகளாகவே இந்நூலுள் அமைக்கப்பட்டுள்ளன.

இனி, தொல்காப்பியனுர் முக்காலங்களுளொன்றை வெளிப்படக் காட்டுவது (தெரிநிலை) வினையென்ருரேயன்றி, அவ்வாறு காலங் காட்டுவது இன்ன இன்ன எழுத்தென்று கூறினர் அல்லர். ஆயினும், விகுதிகட்கு மேல் நிற்கும் க ட த ற என்ற நான்குமே காலங் குறிப்பன என்றும், அந்நான்கும் நக்கனன் உண்டனன் உரைத்தனன் தின்றனன் என, அன் அள் அர் முதலிய விகுதிகளின் முன் அன் சாரியை பெறும் என்றும், அவையல்லாத ஞ ண ந ம வ க்களுக்கும் குற்றுகரங்களுக்கும் பின் இன் சாரியை பெறும் என்றும் உரைகாரர்கள் கொண்டனர். அம்முறையில் நக்கனம் உண்டனம் என்றவாருகவும், அஞ்சினம் உரிஞினம் என்றவாருகவும், அன்னும் இன்னுமாகிய சாரியைகளைப் ப கு தி க ள்

முறையே பெற்றன என்பது அன்னோர் கருத்து (தொல். வினை. 5, உரை).

இவ்வாறு, அஞ்சினம் உரிஞினம் எனக் குற்றுகர முற்றுகரங்களின் பின் நிற்பது இன் சாரியையே என்னு மிடத்து, அவற்றிடையே காலங் காட்டி நிற்பது யாது என்னும் கேள்வி உண்டாம். இதற்கேற்ற விடை பெறு மாறில்லையாதலால், ஈண்டுக் காலங் குறிப்பது, "இன்" என்ற இடைநிலையே யென்று கொள்ளவேண்டும். இது பற்றியே "தடற வொற்று இன்" என்ற நான்கும் இறந்த கால இடைநிலை என்றார் நன்னூலார் என்க.

ககர வொற்றின் பின் அன்சாரியை பெறுவதாகக் காட்டப்பெற்ற 'நக்கனன்' என்பது தனிக் குறிலடுத்த, முற்றுகரமான நகு என்ற பகுதியடியாகப் பிறந்து, இறந்த காலங் காட்டற்கு இடையொற்று மிக்கதேயன்றி வேறன்று.*

## இறந்த காலத்தில் 'இ' எனத் திரிந்து இடைநிலையாதல்

இன் என்ற இறந்தகால இடை நிலையுள் ஈற்று னகரங் குறைந்து இ என்ற உயிரெழுத்தும் இடைநிலையாகப் பயிலும். இவ்விடைநிலை அஞ்சியது, அஞ்சிய என அஃறிணைமுற்று எச்சங்களிலும், அஞ்சியவன் என வினையாலணையும் பெயரிலும் பழைய வழக்காகப்

---

* நகு என்பதன் ஈற்றில் முற்றுகரமாயுள்ளது ககர உகரமேயாதலாலும், வந்தான் உண்டான் சென்றான் என்பன போல, விகுதிமுன் ககரம் வாராமையாலும் ககரத்தை விலக்கித் தடற ஒற்றுக்களையே இறந்தகால இடைநிலைகளாகக் கொண்டார் நன்னூலார் என்பது உய்த்துணரப்படும்.

பெரிதும் வழங்குவதாம். இக்காலவெழுத்து, படர்க்கை விகுதியை அடுத்து அகரச் சாரியை பெறும்.

## எதிர்கால இடைநிலைகள்

பகரமும் வகரமும் ஆகிய ஒற்றுக்களிரண்டும் எதிர் காலத்தைக் காட்டும் இடைநிலைகளாம். உம் என்ற இடைச் சொல்லும் இக்காலம் குறிப்பதென்பர்.

## பகுதிகள் காலங்காட்டு முறையில் வரையறையின்மை

இனி, இம் முக்கால இடைநிலைகளோடும் முன் காட்டிய விகுதிகளோடும் கூடிப் பகுதிகள் நடைபெறு மாற்றை நோக்குவோம். 'நடவா மடிசீ' என நன்னூலார் காட்டிய சூத்திரத்தின் முதலடி குறிக்கும் பகுதிகளை மட்டும் உதாரணமாக ஈண்டு நோக்கத்தகும்.

| எண் | பகுதி | நிகழ்வு | இறப்பு | எதிர்வு |
|---|---|---|---|---|
| 1. | நட | நடக்கிருன் | நடந்தான் | நடப்பான் |
| 2. | வா | வருகிருன் | வந்தான் | வருவான் |
| 3. | மடி | மடிகிருன் | மடிந்தான் | மடிவான் |
| 4. | சீ | சீக்கிருன் | சீத்தான் | சீப்பான் |
| 5. | விடு | விடுகிருன் | விட்டான் | விடுவான் |
| 6. | கூ | கூவுகிருன் | கூவிஞன் | கூவுவான் |
| 7. | வே | வேகிருன் | வெந்தான் | வேவான் |
| 8. | வை | வைகிருன் | வைதான் | வைவான் |
| | வை | வைக்கிருன் | வைத்தான் | வைப்பான் |

இப்பகுதிகள், இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கு முரிய விகுதிகளுடனும், சாரியை சந்திவிகாரங்களுடனும், இணைந்து மேற்கூறியவாறும் பிறவாறும் பல்வேறு விகற்

பங்கள் பெற்றுச் செல்லுதல் காணலாம். இவ்வாறே, நொ போ முதலிய வினைப் பகுதிகளையும் கண்டுகொள்க. இவற்றையெல்லாம் ஒருவரையறைப்படுத்தி இலக்கணம் வகுத்தல் அரிதென்று கருதினர் முன்னோர். பின்னோரும் "ஒரு தன்மையவான பகுதிகள் பலவிதமாக விகாரப்படுத லால் அவையெல்லாவற்றையும் தனித்தனி எடுத்து முடிவு சொல்லுமிடத்து வரையறை யின்றி விரியுமாதலின் செய்யுள் வழக்கத்தையும் உலக வழக்கத்தையும் பார்த்துப் புணர்ச்சி விகாரங்கள் கொண்டு அமைத்துக்கொள்க" என்பர்.*

## வினைத்திரிபுகளின் வரையறையும் வாய்பாடுகளும்

ஆயினும், தமிழ்மொழியுள் அவ்விருவகை வழக்கி லும் பயிலும் ஆயிரக் கணக்கான பகுதிகளையெல்லாம் தொகுத்துக் கொண்டு ஆராயுமிடத்து, அவையாவும் ஒரு சிறு வரம்புக்குட்படவும் இலக்கண அமைதி பெறவும் கூடியன என்பது நன்கு புலப்படும். அம்முறையில், அடியிற் காட்டப்படும் பன்னிருவகையுள், வினைப் பகுதி கள் பெரும்பான்மையும் அடங்குதல் காணலாம். அவை வருமாறு:—

| எண் | பகுதி | நிகழ்வு | இறப்பு | எதிர்வு |
|---|---|---|---|---|
| 1. | செய் | செய்கிறான் | செய்தான் | செய்வான் |
| 2. | ஆள் | ஆள்கிறான் | ஆண்டான் | ஆள்வான் |
| 3. | கொல் | கொல்கிறான் | கொன்றான் | கொல்வான் |
| 4. | அறி | அறிகிறான் | அறிந்தான் | அறிவான் |

* நன்னூல் காண்டிகை: (வை. மு. சடகோபராமானுஜாச்சாரியர் உரை)

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | அஞ்சு | அஞ்சுகிறான் | அஞ்சினான் | அஞ்சுவான் |
| 6. | நகு | நகுகிறான் | நக்கான் | நகுவான் |
| 7. | உண் | உண்கிறான் | உண்டான் | உண்பான் |
| 8. | தின் | தின்கிறான் | தின்றான் | தின்பான் |
| 9. | கேள் | கேட்கிறான் | கேட்டான் | கேட்பான் |
| 10. | கல் | கற்கிறான் | கற்றான் | கற்பான் |
| 11. | பார் | பார்க்கிறான் | பார்த்தான் | பார்ப்பான் |
| 12. | நட | நடக்கிறான் | நடந்தான் | நடப்பான் |

இப்பன்னிரு வாய்பாட்டுப் பகுதிகளும் கால இடைநிலைகளுடனும் விகுதிகளுடனும் கூடி ஐம்பான் மூவிடங்களினும் வழங்குமாற்றை அறிந்துகொள்க.

## நிகழ்கால எதிர்காலங்களிற் பகுதிகள் இடைநிலைகளை ஏற்குமாறு

நிகழ்காலத்துக்குரிய கிறு கின்று ஆநின்று என்ற மூன்று இடைநிலைகளும் மேற்காட்டிய பன்னிரு வாய்பாடுகளுள் முன்னவையான செய் ஆள் கொல் அறி அஞ்சு நகு என்ற ஆறும், நிகழ்வில் வேறுபடாமல் அமைந்து எதிர்வில் வகர இடைநிலை பெறுவன. பின்னவையான உண் தின் கேள் கல் பார் நட என்ற ஆறும், நிகழ்வில் இடைநிலைகளுடன் இணையும்போது சில பகுதியீறுகள் திரிந்தும் சில இடைநிலை வல்லின ஒற்றுக்கள் மிக்கும் பயில்வன. இவற்றுள் கேள் கல் என்பவை கேட்கிறான் கற்கிறான் எனப் பகுதி யீற்றெழுத்துந் திரிந்தன. பார் நட என்பவை பார்க்கிறான், நடக்கிறான் என ஒற்று மிக்கன. இவ்வாறு வருவன நான்கும் எதிர்காலத்தில் பகரவிடைநிலையே பெறும் என்க. உண் தின் என்ற வாய்பாடுகள் பகுதியீறு திரியாவேனும் இதழின் முயற்சி

யெளிமையும் ஓசை நயமும் உடைமையால் அவையும் பகர விடைநிலையே பெற்றன போலும். எனவே மேற் குறித்த பன்னிரண்டு வாய்பாடுகளுள் இயல்பாய் வருவன ஆறும், விகாரம் பெறுவன ஆறும் ஆதல் கண்டு கொள்க.

நிகழ்காலத்துக்கு உரியனவாக நன்னூலார் கொண்ட இடைநிலைகளுள் ஆநின்று என்பது கற்காநின்றான் கேட்காநின்றான் எனக் குகரச் சாரியை பெற்றும் கல்லாநின்றான் கேளாநின்றான் எனஇயல்பாகவும் வரும்.

## இறந்தகாலத்தில் பகுதிகள் இடைநிலைகளை ஏற்குமாறு

[ த், ட், ற், ]

இறந்தகால இடைநிலையான தகரமும் அதன் திரிபுகளான டகர றகரங்களும், இன் என்பதும் விகுதிகளை ஏற்கும்போது ஒன்றோடொன்று பெரிதும் மாறுபடுவனவாகும்.

### வினைகள் திரிந்து மாறுபடுதல்

| | | |
|---|---|---|
| 1 செய்தான் | 5 அஞ்சினான் | 9 கேட்டான் |
| 2 ஆண்டான் | 6 நக்கான் | 10 கற்றான் |
| 3 கொன்றான் | 7 உண்டான் | 11 பார்த்தான் |
| 4 அறிந்தான் | 8 தின்றான் | 12 நடந்தான் |

எனக் காண்க. இவற்றுள் கொன்றான் என்பது கொல் பகுதியாய், தகரம் றகரமாய்த் திரிந்து, பகுதி யீற்று லகரம் றகரத்தின் இனமாகி வேறுபட்டது. தின் நட என்ற வாய்பாடுகள் எதிர்காலத்தில், தின்பான் நடப்

பான் எனப் பகர இடைநிலை பெறுதலின் வேறுபட லாயின. இவை யாவும் ஒன்றுபோல இன்றிப் பெரும் பாலும் திரிபுடையவாதல் காண்க.

## இறந்தகாலத்து இன், இ-இடைநிலைகள் வருமாறு.

செய் ஆள் கொல் அறி அஞ்சு நகு உண் தின் கேள் கல் பார் நட என்ற பன்னிரண்டு வாய்பாடுகளில் ஐந்தா வது அஞ்சு வாய்பாடொழிந்த பதினொன்றும் இறந்த காலத்துத் தகர இடைநிலையையும் அதன் திரிபுகளான டகர றகரங்களையும் பெற, அஞ்சு ஒன்றே இன் இடை நிலையையும் இதன் திரிபான இகர இடைநிலையையும் பெறுதல் கருதத்தக்கது.

உ-ம். அஞ்சினன், அஞ்சிய

அஞ்சு என்ற வாய்பாட்டில் குற்றுகர வீறுகளே யன்றி முற்றுகர வீறுகளும் பலவாம். ஞ ண ந ம ன முதலிய மெய்யீறுகள் உகரச் சாரியையோடு இணைந்தே முற்றுகரமாகின்றன; உரிஞு, பண்ணு, பொருநு, திருமு, உன்னு, வாரு, சொல்லு, அள்ளு எனக் காண்க. இத் தகையன யாவும் வேறு வாய்பாடுகளில் அடங்கா என்க.

இயல்பாகவே உகர மிணைந்த குற்றுகர முற்றுகரங் கள் போலன்றி, மெல்லின இடையின ஒற்றுக்களை ஈற்றிற் கொண்ட வினைப்பகுதிகளன்றோ—உரிஞ், பொருந், திரும் முதலியன எனின், மூலப்பகுதி மெல்லின இடையின வீறுகளே என்பது நன்னூலார்க்கும் தொல்காப்பியனார் போலவே* கருத்தாயினும், இடைநிலைகளை ஏற்கும் போது உகர வீற்றை இயற்கையிலணைந்த முற்றுகரம்

* தொல், சொல், பக். 205 நச்-உரை.

போலவே இணைந்து இவை யாவும் அஞ்சு வாய்பாட்டில் அடங்குவன என அறிக. 'திருநாமம் எண்ணு;' 'குன்றெடுத்தாய் சொல்லு' என முற்றுகரமாகவே யாப்பருங்கல விருத்திகாரர் (பக். 220) கொண்டமையும் நோக்குக.

உண் தின் என்ற வாய்பாடுகளில் உண், பூண், மாண் முரண் எனவும், தின், ஈன், நோன் எனவும் முறையே நான்கும் மூன்றுமான பகுதிகளே தமிழ் மொழியில் வழங்குவன*. இவை—உண்ணினன் தின்னினன் என அஞ்சு (5) வாய்பாடு கொள்ளாமல் உண்டான் தின்றான் என 7, 8 ஆம் வாய்பாடுகட்கு முறையே உரியனவாம். இவையே இவற்றுள் மாறுபாடுகள் என உணர்க.

## இடைநிலையின்றிக் காலங்காட்டும் பகுதிகள்

குடுறுக்களை ஈற்றிற்பெறும் நகு வாய்பாட்டுப் (6) பகுதிகள், இறந்த காலத்து 'நக்கான்' என இடையே வல்லொற்று மிக்கு வரும். இதுபோல, எடு, கொடு, தடு, கடு, மடு போன்ற பகுதிகள் உருவமொத்து வருவனவாயினும், அவை பார் (11) என்ற வாய்பாட்டுளடங்கி வேறுபடுவன. கொடு—கொட்டான் என வாராது கொடுத்தான் என்றுதல் காண்க.

அடு படு போன்ற பகுதிகளிலே அடு — சமை, இற என்ற பொருள்களில் நகு 6ம் வாய்பாட்டிலும், அணுகு, கிட என்ற பெருள்களில் 11ம் வாய்பாட்டிலும் அடங்குவனவாதலின் வேறுபாடுடையன.

---

* மிகச்சிறு தொகையினவான இப்பகுதிகளை இன்ன இன்னவெனக் குறிப்பிட்டு ஒழிபு என்ற பகுப்புட் சேர்க்கலாம். அவ்வாறுயின் மொத்த வாய்பாடுகள் பத்தேயாகும். எனினும் இவ்வினையடிகளின் பழமை வழக்குமிகுதிகளை நோக்கித் தனித் தனி வாய்பாடாகக் கொள்ளப்பட்டன.

## வினையாலணையும் பெயர்கள்

வினைப்பகுதிகள், முற்று எச்சம் முதலியவற்றிற் போலவே, வினையாலணையும் பெயர்களிலும் அமைந்து இடைநிலைகளை ஏற்பனவாம். ஆனால் அவை செய்கிற வன் செய்தவன் செய்பவன் என அன் முதலிய விகுதிகள் பெறும்போது இடைநிலைகளையடுத்து அகரச் சாரியை பெறும் என்க.

## எதிர்மறை இடைநிலை

எதிர்மறையில் ஆ என்ற இடைநிலை பெரிதும் பயில் வது. இது முக்காலத்துக்கும் உரித்தாய் எல்லாப் பகுதி களுடனும் இயல்பாகவே கூடி நடக்கும். இல் அல் இடைநிலைகளும் உள; இவை பற்றிய குறிப்பை நூலுள் 53-ஆம் சூத்திரத்துட் காண்க.

## வினையெச்சம்

வினையெச்சவாய்பாடுகள் இயல்பாயும் உகரமும் குகரமு மாகிய சாரியைகளிலொன்று பெற்றும் வரும். செய்து என்னும் வாய்பாடு செய்து, ஆண்டு, கொன்று, அறிந்து நக்கு எனவும், செய்பு என்னும் வாய்பாடு உண்ணுபு, தின்னுபு என உகரச் சாரியையும் கற்குபு, கேட்குபு, பார்க்குபு, நடக்குபு எனக் குகரச் சாரியையும் பெற்றும், செய என்னும் வாய்பாடு கற்க, கேட்க, பார்க்க, நடக்க எனக் குகரச் சாரியை பெற்றும் வரும். இவை யல்லாத செய்யா செய்யூ முதலிய வாய்பாட்டு வினையெச் சங்கள், சாரியை ஏலாதன என்க. உகர வீருன அஞ்சு (5) வாய்பாட்டுச் செய்தென் வினையெச்சம், இகர விகுதியே ஏற்கும் என்க. அஞ்சி, உரிஞி, பண்ணி முதலியன காண்க.

## பிறவினை விகுதிகள்

வினைப்பகுதிகள் வி, பி என்ற பிறவினை விகுதிகளை ஏற்கும்போது அவற்றையும் இணைத்து ஒரு பகுதியாகக் கொள்வதே மரபு. செய்வித்தான், செய்வித்த, செய்வித்து என முற்று விகுதிகளையும், எச்ச விகுதிகளையும் ஒட்டிக் காண்க. இவற்றுள், நிகழ்காலத்து வரும் பன்னிரு வாய்பாடுகளுள், வி விகுதி, முதலாறு வாய்பாடுகளோடும் பி விகுதி, பின் ஆறு வாய்பாடுகளோடும் இணைவன. இவ்விருவகையில் இணைந்த யாவும் பார் (11) வாய்பாட்டில் அடங்கும்.

## காலங்காட்டும் விகுதிகள்

தன்மை ஒருமை பன்மைகளை முறையே உணர்த்தும் டு, து, று; டும், தும், றும் என்ற விகுதிகளும், மின், இர், ஈர் முதலிய ஏவல் விகுதிகளும், செய்யுமென் வாய்பாட்டு உம் என்ற முற்று விகுதியும், அஃறிணைப் பன்மையில் வரும் எதிர்மறை விகுதியும், பிறவும் வேறு இடைநிலை யின்றித் தாமே காலங் காட்டுவன. இவற்றை நன்னூலார் 'றவ்வொ டுகர வும்மை' என்ற சூத்திரத்துட் கூறுவர். இவற்றின் உதாரணங்களை அதன் உரைகள் நோக்கி உணர்க. இவை யாவும் மேற்காட்டிய பன்னிரு வாய்பாட்டுப் பகுதிகளுடன் இயங்குதல் பற்றி இங்கெடுத்து மொழியப்பட்டன.

## சாரியை சந்தி விகாரங்கள்

பகுதி, விகுதி, இடைநிலைகட்கு இடையில் வேறு சாரியை, சந்தி, விகாரங்களும் வரக்கூடியன. அவை இங்கே கூறப்பட்டில. முன்னூல்கள் நோக்கி உணர்க

## துணைவினைகள்

பகுதிகள் பல, துணைவினைகளை ஏற்று ஒரு சொற் போல நடப்பன உள. அவை இரு, இடு, படு, உண், ஈ, கொள், தகு, தரு, வரு போல்வன. இவை யாவும் தனி வினைகளே யாதலின், அதனதன் வாய்பாடுகளின் இயல்பைப் பெறும் என்க.

## இடைநிலை விகுதிகட்கிடையில் சாரியை வருதல்

உயர்திணை முப்பால்களை யுணர்த்துவனவும் குறிலடுத்தவுமான—ன, ள, ர வீற்று விகுதிகள் பகுதிகளுடன் இணையும்போது, இடையில் அன் சாரியை பெறுவன ஆகும். ஆனல், எதிர்காலத்து, செய்வன–ன்–ள்–ர் எனக் கூறும் வழக்கில்லை. று என்னும் அஃறிணை ஒருமை விகுதி, அன் சாரியை ஏற்குமிடத்துச் செய்தன்று, உண்டன்று, புக்கன்று என இறந்த காலத்து வரும். அஞ்சு (5) வாய்பாடு இறந்த காலத்தில் அன் சாரியை பெருது. கூவு, போகு என்ற உகர வீற்றுப் பகுதிகள் வினையெச்சத்தில் கூய் போய் எனவும் அஃறிணை ஒருமை முற்றில் கூயின்று போயின்று என இன் சாரியை பெற்றும் வருதலுண்டு.*

## வாய்பாடுகளின் ஈறுகளும் அவற்றின் தொகையும்

மேலே கூறிப்போந்த பன்னிருவகை வாய்பாடுகள், ஒன்றும் பலவுமான ஈற்றெழுத்தினைக் கொண்டு நடைபெறுவன என்பதும், அவை இறுதியில் குறிக்கப்பட்ட தொகை அளவினவாய்ப் பெரும்பாலும் வரும் என்பதும் அறியத்தகும். அவை வருமாறு :–

---

* இந்நூலின் 57-ம் சூத்திரக் குறிப்பினுள் இதன் விரிவு காண்க.

முதலாவது :- செய் என்ற வாய்பாடு தனிக்குறிலடுத்த யகர மெய்யும் முற்றுகரமும் தனி ஐகாரமுமாகிய ஈறுகளை உடையது.

[உ—ம்] செய், தொழு, வை. (தொகை 9)

இரண்டாவது :- ஆள் என்ற வாய்பாடு தனி நெடிலையேனும் தனிக்குறிலையேனும் இணைக்குறிலையேனும் அடுத்த ளகர வீறு உடையது.

[உ—ம்] ஆள், கொள், தெருள். (தொகை 33)

மூன்றாவது :- கொல் என்ற வாய்பாடு தனிக்குறிலையேனும் இணைக்குறிலையேனும் தனிநெடிலையேனும் அடுத்த லகரவீறு உடையது.

[உ—ம்] கொல், முயல், சால். (தொகை 46)

நான்காவது :- அறி என்ற வாய்பாடு இகர, ஈகார, உகர, ஐகாரமாகிய உயிர்களையும் ய, ர, ழ என்ற மெய்களையும் ஈருக உடையது.

[உ—ம்] அறி, ஈ, எழு, இசை, பாய், படர், பிறழ். (தொகை 372)

ஐந்தாவது :- அஞ்சு என்ற வாய்பாடு குற்றுகரங்களையும் தனிக்குறிலடுக்கர்த முற்றுகரங்களையும் ஈருக உடையது.

[உ—ம்] பாடு, எழுது, அகவு. (தொகை 1210)

ஆருவது :- நகு என்ற வாய்பாடு பெரும்பான்மை தனிக்குறிலையும் சிறுபான்மை பிற எழுத்துக்களையும் அடுத்துவரும் கு, டு, று எழுத்துக்களை ஈருக உடையது.

[உ—ம்] புகு, இடு, உறு, வீறிடு, வேசறு. (தொகை 30)

ஏழாவது ;- உண் என்ற வாய்பாடு ணகர வீருன மொழிகளாம்.

[உ—ம்] பூண், மாண். (தொகை 4)

எட்டாவது;- தின் என்ற வாய்பாடு னகர வீருன மொழிகளாம்.

[உ—ம்] ஈன், நோன். (தொகை 3)

ஒன்பதாவது :- கேள் என்ற வாய்பாடு ளகரத்திரிபான மொழிகளாம்.

[உ—ம்] கள், மீள். (தொகை 8)

பத்தாவது :- கல் என்ற வாய்பாடு லகரத்திரிபுடைய மொழிகளாம்.

[உ—ம்] நூல், வில். (தொகை 6)

பதினென்ருவது :- பார் என்ற வாய்பாடு அ, இ, உ, ஆ, ஈ, ஐ, ஓ உயிர்களையும், ய, ர, ழ மெய்களையும் ஈருக உடையது.

[உ—ம்] சலசல, அடி, மடு, கா, சீ, உழை, கோ, தேய், உதிர், முகிழ். (தொகை 1327)

பன்னிரண்டாவது :- நட என்ற வாய்பாடு குறிலடுத்த அகரவீறும், ஆகார ஓகாரவீறுமுடைய மொழிகளாம்.

[உ—ம்] விய, இறுமா, மோ. (தொகை 72)

ஆக மொத்தம் வினைப்பகுதிகள் உத்தேசம் மூவாயிரத்து நூற்று இருபது ஆகின்றன. இவை தமிழ்ப் பேரகராதியினின்று (Lexicon) தொகுக்கப்பட்டன. இவற்றுள், வட சொற்களையும், திசைச் சொற்களையும்

நீக்கினும் உத்தேசம் 3000க்குக் குறையாது என்பது தெரியலாம். ஏனைய தமிழ்ப் பகுதிகள் நூற்றுக்கு மேற்பட்டும் கீழ்ப்பட்டும் உள்ளன. பத்து (10) எண்ணுக்கு உட்பட்ட வாய்பாடுகளும் உண்டு; அவை 1, 7, 8, 9, 10 என்ற ஐந்துமாம். இவற்றுளெல்லாம் மிக்கு வழங்கும் வாய்பாடுகள்—ஐந்தும் பதினொன்றுமாம்.

## 5, 11-ஆம் வாய்பாடுகள் பெருகுதற்குக் காரணம்

மேற்காட்டியவற்றுள் அஞ்சு, பார் என்ற வாய்பாடுகள் மிக்கு வழங்குவதற்குக் காரணங்கள் உண்டு. அவை வருமாறு:—

1. குற்றுகர முற்றுகர ஈறுகளைக் கொண்ட ஐந்தாம் வாய்பாடு–பார்(11) தவிர – ஏனையவற்றினும் இயற்கையிலே மிக்க தொகையுடையதாகும். அதனுடன் செயற்கையாக வேறு வாய்பாட்டுப் பகுதிகளும் சேர்ந்து, அது பெருகுவதாயிற்று. அஃதாவது, (1) குற்றுகர வீற்றவாய்த் தன்வினையாக அமைந்த திருந்து, உருகு, ஆடு என்ற பகுதிகளுடன் அவற்றின் பிறவினை யுருவங்களான திருத்து, உருக்கு, ஆட்டு என்ற இடையொற்று இரட்டின பகுதிகளுஞ் சேர்ந்து இருவகையுங்கூடி மிகுதலாம்.

(2) சில வாய்பாடுகள் தன் வினையினின்று பிறவினையாதற்குக் கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துக்களை ஈற்றிற் பெற்று இவ்வைந்தாம் வாய்பாட்டிற் சேர்ந்து பெருகுதல்.

[உம்] போ–போக்கு; பாய்-பாய்ச்சு; உருள்-உருட்டு நட-நடத்து; எழு-எழுப்பு; பயில்-பயிற்று.

உருள் (2), பயில் (3), எழு போ பாய் (4), நட (12)— இவை மேற்கூறிய பிறவினை விகுதிபெற்று, அஞ்சு வாய்பாட்டில் அடங்குதல் காண்க.

இனி, பதினொன்றாவது 'பார்' என்ற வாய்பாடு,எல்லா வற்றினும் மிகுதியாகப் பெருகியதற்குக் காரணம்:—

1. தன்வினையான பகுதிகளை அடுத்துவரும் இடை நிலைகளில் வல்லொற்று மிக்குப் பிறவினையாதல்.

[உ-ம்] சேர்ந்தான் சேர்த்தான்; வீழ்ந்தான் வீழ்த் தான்; சாய்ந்தான் சாய்த்தான் போல்வன.

ஈண்டு—சேர் வீழ் சாய் என்ற அறி (4) வாய்பாட்டுப் பகுதிகள், பிறவினையாதற்கு வல்லொற்று மிக்குப் பார் (11) வாய்பாடாயின.

[தன்வினைப்பகுதிகள் செயப்படுபொருள் குன்றியும், பிறவினைப் பகுதிகள் செயப்படுபொருள் குன்றாமலும் பெரும்பாலும் வருவன.]

(2) ஒலி, ஒளி, விரைவு முதலிய பண்பு குறிக்கும் இரட்டைக்கிளவிகளாய்க் குறிப்புப் பொருளுணர்த்தும் பகுதிகள் கூடிப் பெருகுதல்.

[உ-ம்] சலசலத்தது ('பச்சோலை சலசலத்து'— ஔவை) பளபளத்தது, மடமடத்தது.

(3) வடசொற்கள், திசைச்சொற்கள் அடியாக வழங்கும் பகுதிகள் கூடிப் பெருகுதல்.

[உ-ம்] பராமரித்தல், பரிணமித்தல், அதிகரித்தல். இவை பெரும்பாலவும் இகர வீறு உடையன. எனவே, ஐந்தாம் வாய்பாடு வேறு இரண்டுருவங்களையும், பதினொன்றாம் வாய்பாடுதானே வேறுபட்டதோர் உருவத் தையும் ஏற்றுவருமென உணர்க. இவையாவும் பலவாக வழங்குதலை 5, 11-ஆம் வாய்பாடுகளின் 'பகுதி—அட்ட வணைக் குறிப்பிற்' காண்க.

## ஒழிபு

மேலே காட்டிய பன்னிருவகையுள் அடங்காமல் மாறுபட வழங்கும் வினைப்பகுதிகள் உண்டு. சிறுபான்மையாக வழங்கும் அவை யாவும் ஒழிபு என்னும் தனிப்பகுதியுள் அடக்கிக்கொள்ளத் தகும். அவை வருமாறு:-

1—நில் என்னும் வினைப்பகுதி நிற்கிறான், நின்றான் நிற்பான் என இறந்தகாலத்தில் மாறுபட்டுப் பன்னிரு வகையுள் அடங்காமல் வருதல் போல்வன.

(1) சொல் என்னும் பகுதி — சொன்னான், சொற்றான், சொல்ல, சொல்லின, சொன்ன எனவும்,

(2) நோ என்னும் பகுதி — நொந்தான், நொந்த, நொந்து, நோக, நோகின் எனவும்,

(3) தபு என்னும் பகுதி — தபுத்தான், தபுக்க, தப, தப்பிய, தப்பி எனவும் வருவன போல்வன.

(4) உகர வீற்றுப் பகுதிகளுட் சில இன் இடைநிலை பெறுமிடத்து, ஆகின, போகின என்றவாறு வருதலன்றி ஆய, ஆன; போய, போன எனவும் கூவு, தாவு, பாவு என்பன கூய், தாய், பாய் எனவும் வருதல்.

2—ஆறுவது நகு வாய்பாட்டுக்குரிய வினைப்பகுதிகளுள் மிகு, புகு முதலியன மிகுந்தது, புகுந்தது என நான்காவது அறி வாய்பாடுபோல வழங்குவன.

3—ஆயிற்று, போயிற்று என்பன உலக வழக்கில்

ஆய்த்து, ஆச்சு; போய்த்து,* போச்சு எனவும், போகட்டான் என்பது போட்டான் எனவும் மருவி வருதல்.

4—நின்றீத்தை, காண்டைப்பாய் (கலித். சிலப்.) நில்லாப்பாய் (திருவாய்) *அழுகின்று (இறை-கள-உரை) என வினைத்திரிசொல்லாய் வருதல்.

5—'ஒருங்ககப்படேஎனாயின்' (புறநா) 'இலக்குவனைப் படேஎனேல் (கம்பரா. நாகபாச. 1.) என்பன போல அளபெடுத்துப் பிறவினைப் பொருள்களிலும் (அசைஇ) (–இருந்து, இருத்தி), நிலைஇ (-நின்று, நிறுத்தி) எனத் தன்வினை பிறவினைப் பொருள்களிலும், வேறு வினைப் பகுதிகள் அளபெடை கொண்டு பிறவேறு பொருள்களிலும் முன்னூல்களில் வழங்குதல்.

6—எய்யாது – அறியாது; (தொல். சொல், 342) 'எய்யாதாகும்' (புறநா),செத்து (–கருதி)'வாயாச் செத்து' (தொல். சொல், 405 உரை) என்பனபோல வேறு கால உருத் தெரிய இடமின்றி ஒரு காலவுருவே தெரிய வருவன.

7—உண்மன என்ற வினை, யான் உண்மன, நீ உண்மன, அவன் உண்மன என மூவிடத்தும் முற்றாகவும், உண்மன குதிரை என எச்சமாகவும் வருதல்

---

* "போக்கினீர் என்றாசி போய்த்தென்" (கம்பராமாயணம் சூர்ப்பணகை) "போச்சு இத்தனை போலும் நின்றாற்றல் (ஷை சடாயு உயிர்நீத்த-26) "வீரமுங் களத்தே போட்டு" (ஷை கும்பகர்ணன் வதை) "போடகலப் புல்லொழுக்கை" (ஷை சூர்ப்பணகை).

போல்வன. என்மனார், என்மர், என்றிசினோர் என்பனவும் அருகிய வழக்குக்களாம்.

மற்றும் இவை போல்வன பலவும் தொல்காப்பிய முதலிய பண்டை நூல்கள் உரைகள் வாயிலாக அறிந்து அடக்கிக்கொள்க.

## முடிபு

இவ்வாறு, பன்னிரு வாய்பாடுகளும், பிறவும், பல் வகையாக மாறுபடுதற்குத் தக்க காரணம் தெரியவில்லை. ஒருகால், பொதுவாக மொழி நூல் வல்லாரும், சிறப்பாகத் திராவிட பாஷைகளிற் பயிற்சியுடையாரும், ஆராய்ந்து இவற்றுக்கு விடைதரக்கூடும். இடு—இட்டான் என்பது போலக் கொடு—கொட்டான் என்று தமிழ்வழக்கில் வாராமல், பதினொன்றும் வாய்பாட்டுக்குரிய பார் என்பதனுள், சேர்கின்றது. ஆனால், 'கொட்டனு' எனக் கன்னட மொழியுள் அது வழங்கும் என்பர். புகு என்பது, புகுந்தான் எனப் பழைய நூலுள் (மணிமேகலை) அருகி வழங்குகின்றது. அது போல, நகு என்பது நகுந்தான் என வாராது. செய், உண், நட என்ற வாய்பாட்டு வினைகள் எதிர்காலத்தில் செய்பான், உண்வான், நடவான் என வாரா. இதழ்களின் முயற்சி எளிமையும், இன்னோசையும் நோக்கி, செய்வான், உண்பான், நடப்பான் என, வகர பகரங்கள் பெற்றன போலும். இவற்றுள் நடவான் என்பது, எதிர்மறைப் பொருட்கே உரியதாதலுங் காண்க. இவ்வாறு, ஒன்றற்கொன்று வேறுபட நிற்றற்குக் காரணங்கள், ஆராய்ச்சிக்கு உரியனவேயாம்.

---

* 'அருகி வழங்கும் வினைவிகற்பங்கள்' என்ற என் கட்டுரை காண்க (ஆராய்ச்சித் தொகுதி)

ஸ்ரீ

# வினைத்திரிபு விளக்கம்

வணக்கம்.

சந்தனப் பொதியச் செந்தமிழ் மொழிக்குப்
பாயிர மாக ஆயிரம் அருளிய
தெய்வக் கவிஞன் தென்குரு கூரன்
மாறன் வகுளா பரணன் மலரடி
மனத்துற வைத்து வகுப்பன்
வினைத்திரி புறூஉம் விருந்திலக் கணமே.

குறிப்பு :- பொதியின் முனிவரான அகத்தியனர் உருவாக்கியதாதலின், 'பொதியச் செந்தமி' ழென உபசரிக்கப்பட்டது. பாயிரம் என்பது, நூல்களின் முடிவினைச் சுருங்க உணர்த்துவது. ஆயிரம்—திருவாய்மொழி; ஆகுபெயர். தமிழ்மொழியின் முடிந்த கொள்கை இறைவனடி சார்தலேயாதலின், அதனை விளக்கும் அருளிச் செயல் பாயிரம் எனப்பட்டது. 'அருந்தமிழ்க்குப் பாயிரம்' என்ருர் கம்பநாடரும் (சடகோபரந்தாதி). தெய்வக் கவிஞன் - பரம்பொருள் ஒன்றனையே பாடிய புலவன்; தெய்வப் புலமையுடையான் எனினுமாம். "தேவிற் சிறந்த திருமாற்குத் தக்க தெய்வக் கவிஞன்" என்ருர் பிற

ரும். வினைத்திரிபுகளை விகரணம் என்பர் வடநூலார். விருந்து இலக்கணம்—புதுமுறையில் அமைந்த இலக்கணம். விருந்து—புதுமை.

## நூல்

1. தமிழ்மொழி யதனுட் பெயர்வினை யிடையுரி
எனச்சொல் நான்காம் இவற்று ளிடையுரி
ஏனை யிரண்டனுள் டிணைந்துவரு வனவே.

குறிப்பு:- தமிழ்ச் சொற்கள் நான்கன் இலக்கணங்களைத் தொல்காப்பியம், நன்னூல் முதலியவற்றுல் அறிக. இவற்றுள் இடைச்சொல்லும், உரிச்சொல்லும் பெயர், வினைகளைச் சார்ந்து வருவனவாதலின், முன்னவை இரண்டுமே சிறப்புடையன என்றபடி.

## வினைச்சொல்

2. வினைதான் தெரிநிலை குறிப்பென இரண்டாம்,

குறிப்பு:- வினை என்றது, அதன் முதனிலைகளை என்க.

3. வெளிப்படக் காலந் தெரிப்பது தெரிநிலை.

குறிப்பு :- செய்பவன், கருவி, நிலம், செயல், செய்பொருள்களையும் குறிப்பதாயினும்,காலம் சிறந்ததாகலின் அதுவே குறிப்பிடப்பட்டது. ஏனையவற்றுக்கும் அஃது உபலக்கணம்.

4. பகுதியொடு சிறக்க இடைநிலை பயின்று
சாரியை விகாரஞ் சந்தி விகுதிகள்
கொண்டு காலங் குறிக்குமற் றதுவே.

குறிப்பு :- இடைநிலை யின்றியும் காலத்தை வெளிப் படக் காட்டும் பகுபதமு முளவாதலின், 'சிறக்க' எனப் பட்டது. பகுபத வுறுப்புக்கள், ஆறுடனன்றிக் குறைந் தும் வருவதுண்டு.

5. நிகழ்விறப் பெதிர்வெனக் கால மூன்றே.

6. கின்று கிறுஆ நின்று நிகழ்வும்
தடறஇன் நான்கு இறப்பும் பவ்வொடு
வவ்வு மும்மும் எதிர்வும் வழக்கிடைக்
கால இடைச்சொல் லாகக் கழறுப.

குறிப்பு :- கால விடைநிலைகளைத் தொல்காப்பியனார் தனியே கூறியவரல்லர். க, ட, த, ற எழுத்துக்களின் பின், அன்னும், இன்னுமாகிய சாரியைகள் சேர்ந்து இறந்த காலத்தையும், பவ்வும், வவ்வும் ஏற்றபெற்றி முதனிலைகளோடு சேர்ந்து எதிர்காலத்தையும் உணர்த் தும் என்பர் உரைகாரர்கள். செய்யாநின்றான் என்பத னுள், ஆகாரம் சாரியை என்பது ஒரு சாரார் கொள்கை. இவற்றையெல்லாம் ஏற்காது 'ஆநின்று' என்பதே நிகழ் கால இடைநிலை என்றார் நன்னூலார். 'உம்' விகுதி நிகழ் காலங் காட்டுதல் முன்னை வழக்கு. "முக்காலத்தினு மொத்தியல் பொருளைச், செப்புவர் நிகழுங் காலத்தானே" என்பர் நன்னூலார். அவர் இறந்தகால இடைநிலை களாகத் த, ட, ற, இன் என்ற நான்கனையும் கொள்வர். தகர மெய், ளகர லகரங்களோடு மயக்கமின்மையின், அதுவே டறக்களாகத் திரிந்ததெனலே ஏற்கும். ஆயி னும், வழக்கும் தெளிவும் நோக்கி, டகரமும் றகரமும் தகரத்துடன் இறந்தகால இடைநிலைகளாக அவராற் கொள்ளப்பட்டன.

## வினைத்திரிபுகள் உண்டாமிடம்

7. இடைநிலை முதனிலை இவற்றி னிடையிற்
சந்தி சாரியை வந்து பயில்வுழி
வினையடி கொள்ளும் விகற்பம் பலவாம்.

குறிப்பு :- முதனிலை, பகுதி, வினையடி, தாது-என்பன ஒரு பொருட் கிளவிகள். வினைத்திரிபு எனினும், வினை விகற்பம் எனினும் ஒக்கும். வினைத்திரிபு என ஈண்டுக் கூறப்புக்கது, பகுதி இடைநிலைகட்கு இடையில் பெரும் பான்மை நிகழும் வேறுபாடுகளை. இடைநிலைக்கும் விகுதி கட்கும் இடையில் நிகழும் செய்கைகளுட் சிலவே இந் நூலுட் கூறப்படும்; ஏனைய தொல்காப்பிய முதலிய முன் னூல்களையும் உரைகளையும் நோக்கி உணர்ந்துகொள்க.

## வினைத்திரிபுகளின் இலக்கணம்

8. முக்கா லத்தினும் ஒத்தியல் வின்றி
வினையுரு கால மொன்றினும் பலவினும்
வேறுபட வருவது வினைத்திரி பாகும்.

குறிப்பு:- நன்னூலுள் "நடவாமடிசீ விடுகூவேவை" எனவரும் சூத்திரத்தின் வினைப்பகுதிகளை நோக்குக. நூன்முகத்துள் பதினைந்தாம் பக்கத்திற்கண்ட குறிப்பும் அறியத்தகும்.

9. பன்னிரு வகையாப் பகுப்புறும் அதுவே.

10. அவைதாம்,
செய்யாள் கொல்லறி அஞ்சுநகு உண்தின்
கேள்கல் பார்நட எனும்வாய் பாட்டின.

குறிப்பு:- விரிந்து பரந்தன இப்பன்னிரு வாய்பாட்டுப் பகுதிகள். இவை மேற்கூறிய வாய்பாடுகளுள் அடங்குவன என்பது பின்வரும் செய்கைச் சூத்திரங்களால் அறியத்தகும்.

## மொழியீற்றெழுத்துக்கள்

11. பன்னீ ருயிரும் பதினொரு மெய்யும்
மொழியீற்று வருஉம் எழுத்தென மொழிப.

குறிப்பு:- தமிழ்மொழியின் இறுதியில்வரும் எழுத்துக்கள் உயிர் பன்னிரண்டும் ஞ, ண, ந, ம, ன; ய, ர, ல, வ, ழ, ள என்னும் மெய்கள் பதினொன்றுமாம் என்பர் முன்னோர். எனவே, இவ்வீற்றெழுத்துக்களிற் பெரும்பாலன மேற்கூறிய வாய்பாடுகளில் வருதற்குரிய இறுதி எழுத்துக்களாம் என்க. அவை அடுத்துக் கூறப்படும். உகரத்துள், குற்றுகரமும், முற்றுகரமும் அடங்கும்.

## சிறப்பு விதி

12. ஈற்றெழுத் தாயவிவ் விருபான் மூன்றனுள்
ஈண்டுச் செய்கைக்கு நேரே லாதன
எகரமும் ஞநமவும் எனஐந் தாமே.

குறிப்பு:- எனவே, அவ்விருபத்துமூன்று எழுத்துக்களுள்-எகரவுயிரும் ஞ, ந, ம, வ, ஒற்றுக்களும் ஒழிய ஒழிந்த–பதினெட்டு எழுத்துக்களுமே மேற்கூறிய பன்னிருவகை வினைத்திரிபுகளிலும் ஈருகப் பயிலக்கூடியவை என்பது பெறப்படும்.

## ஏலாத எழுத்துக்கள் ஏற்குமாறு

13. ஏலா மெய்கள் இயங்குற வேண்டின்
உகரச் சாரியை யீற்றி னுடையவாய்
இயல்வ தின்றி யமையா தாகும்.

குறிப்பு :— மேல் ஏலாதன என்று சொல்லிய ஞநமவ, என்னும் மெய்யீற்று வினைகள், உரினு, பொருநு, திருமு, தெவ்வு என உகரச்சாரியை ஏற்றே செய்கைக்கு உரியவா மென்க. எனவே, ஏனைய மெய்கள் செய்கை பெருவிடத்தும், உகரச் சாரியை ஏற்பனவும், ஏலாதனவுமுள என்பதாயிற்று.

## வாய்பாடுகளின் ஈற்றெழுத்துக்கள் வருமுறை

14. *(1)* செய்வாய் பாடு உஐ யக்களை
ஈற்றெழுத் தாக்கொண் டிணைவினை யாகும்.

[உ—ம்] உழு, வை, பெய்.

15. *(2)* ஆள்கொல் கேள்கல் வாய்பாடு முறையே
ளலவீ றுடைய முதனிலைக் குரியன.

[உ—ம்] கொள், செல்; வேள், நூல்.

16. *(3)* அறிவாய் பாடு இஈ உஐ
யரழ ஈறிவை ஏற்கும் வினைச்சொலாம்.

[உ—ம்] அறி, ஈ, எழு, இசை, ஆய், நேர், வாழ்.

17. *(4)* அஞ்சுவாய் பாடு உகரவீற் றதுவே.

18. *(5)* குற்றுக ரங்களும் யழமெய் யொழிந்த
ஒற்றீ றேற்கு முற்றுக ரங்களும்
அவ்வாய் பாட்டி னமையப் பெறுமே.

[உ—ம்] அஞ்சு, உரினு பொருநு முதலியன. தனிக்குறி லடுத்த முற்றுகரங்கள் இவ்வாய்பாட்டில் அடங்கா.

19. நகுவாய் பாடு தனிக்குறி லடுத்த
குடுறு வீற்றினைக் கொளுமமுத னிலைகள்.

[உ—ம்] புகு, இடு, உறு.

[நகுவாய்பாடு, போடு எனத் தனி நெட்டெழுத்தை அடுத்தும், வீறிடு வேசறு, எனப் பிற எழுத்துக்களை அடுத்தும் குடுறு ஈற்றவாய் வருதலுண்டு. இவை சிறுபான்மைய.]

20. உண்தின் வாய்பா டிரண்டும் முறையே
ணகர னகரவீ றுடையன வாகும்.

[உ—ம்] பூண், மாண்; ஈன், தின்.

21. பார்வாய் பாடு அஇ உவ்வொடு
ஆ ஈ ஐ ஓ யரழவீ றும்பெறும்.

[உ—ம்] சலசல, அடி, மடு, கா, சீ, உழை, கோ, தேய், உதிர், முகிழ்.

22. நடவாய் பாடு தனிக்குறி லடுத்த
அகர ஆகார ஓகார வீற்றது.

[உ—ம்] அள, அண்ணு, மோ.

## இவ்வாய்பாடுகள் செய்கையில் ஒரு தன்மைப்பட நடத்தல்

23. செய்கையிற் பெரிதும் சேர்ந்த வினையிடை
ஒப்ப முடியு மொழுக்கின இவையே.

குறிப்பு:— மேலே கூறிய மொழியீறுகள் தத்தம் வினைகளில் ஒன்றுபோல நடக்கும் முடிபினையுடைய எ—று. இவை பெரும்பான்மை வேறுபட்ட செய்கையுடையவல்ல என்றபடி.

24. ஈற்றெழுத் துடையஇவ் வினைகள் இடைநிலை
ஏற்றவழி நிகழுஞ் செய்கையினி இயம்புவல்.

## இறந்தகால இடைநிலைகளின் செய்கை முறை

[தகர இடைநிலை]

25. இறந்த காலந் தருந்தொழி லிடைநிலை
தவ்வே; அதுதான் தனித்துந் திரிந்தும்
அஞ்சுநங்கு வொழிந்த ஈரைந்து வினையொடும்
வந்து பயிலும் வழக்கின தாமே.

குறிப்பு:- இறந்த காலத்துக்குத் தகர, டகர, றகரங்கள் ஆகிய மூன்று இடைநிலைகள் கூறப்படுவதுண்டேனும், ட, ற-இரண்டும் தகரத் திரிபுகளே யாதலின், அத்தகரமே ஈண்டுச் செய்கைக்குரியதாகக் கொள்ளப்பட்டது.

26. செய்வாய் பாடு திரிபின்றி யியலும்.

[உ-ம்] செய்—செய்தான்.

27. ஆளது ளகரமும் கொல்லது லகரமும்
ணனவாய்த் திரிந்து தவ்வும் டறவாம்.

[உ-ம்] உருள்—உருண்டான், கொல்—கொன்றான்

28. அறிவாய் பாட்டுத் தகரமுன்னர்
இனவெழுத் திடைமிக் கியலு மென்க.

[உ—ம்] அறி—அறிந்தான், ஈ—ஈந்தான்.

29. உண்ணின் தகரமும் தின்னின் தகரமும்
டறவொற் றாகத் தாநடக் கும்மே.

[உ—ம்] உண்—உண்டான், தின்—தின்றான்.

30. கேள்கல் வாய்பாட்டு ளகர லகரங்கள்
டறவாய்த் தகரமும் டறவா கும்மே.

[உ—ம்] கேள்—கேட்டான், கல்—கற்றான்.

31. பாரின் தகரம் தன்னொற்று மிகுமே.

[உ—ம்] பார்—பார்த்தான்.

32. நடவின் தகர மினவெழுத்து மிகுமே.

[உ—ம்] நட—நடந்தான்.

## இன் இடைநிலை

33. அஞ்சுவாய் பாட்டுக் கின்னே இடைநிலை.

[உ—ம்] அஞ்சு + இன் + ஆன்—அஞ்சினான்.

34. நகுவாய் பாடு தனிக்குறி லடுத்த
குடுறு வீற்றினைக் கொண்டு சுழிவினை
இடைநிலை யின்றியொற் றிரட்டி யிசைக்கும்.

[உ—ம்] புகு—புக்கான், அடு—அட்டான், உறு—உற்றான். [போடு—போட்டான் எனச் சிறுபான்மை நெடில் முதலியன அடுத்த குடுறுக்கள் ஒற்றுமிக்கு வருதலுண்டு]

* நகு வாய்பாட்டிலடங்காது தனிக்குறிலடுத்து வரும் குடுறுவீற்று மொழிகளும் உள. அவை அடு, உடு, எடு,

கொடு போல்வன. இவை பார் (11) வாய்பாட்டிற் சேர்வன என்க.

## நிகழ்கால இடைநிலைகள் செயல்படுமாறு

[கிறு, கின்று, ஆநின்று, உம்.]

35. **கின்றுங் கிறுவுமா நின்றும் உம்மும்**
செய்முத லாகச் செப்பிய வாய்பா
டெட்டின் இயல்பாய்த் தனித்தியங் கும்மே.

[உ—ம்] செய்கிறான், செய்கின்றான், செய்யாநின்றான், செய்யும். இவ்வாறே பிற வாய்பாடுகளினும் ஒட்டிக் கொள்க.

## கேள் கல் வாய்பாடுகளில்

கின்று, கிறு என்பவற்றின் செய்கை

36. கேள்கல் லிரண்டிலுங் கின்றுங் கிறுவும்
வினையின் ளலக்கள் டறவாய்த் திரியும்.

[உ—ம்] கேட்கின்றது, கேட்கிறது; கற்கின்றது, கற்கிறது.

## பார், நட வாய்பாடுகளில்

கின்று, கிறு என்பவற்றின் செய்கை

37. பார்நட வெனும்வாய் பாட்டி னிடைநிலை
தம்மொற்று மிகுத் தானடக் கும்மே.

[உ—ம்] பார்க்கின்றது, பார்க்கிறது; நடக்கின்றது; நடக்கிறது.

### ஈற்று நான்கு வாய்பாடுகளினும் ஆநின்று என்பதன் செய்கை.

38. ஆநின் றென்னும் நிகழ்வி னிடைநிலை
கேள்கல் பார்நட நான்கினுங் குகரம்
பெற்றும் பெருதுமிப் பெற்றியின் வருமே.

[உ—ம்] கேட்கா நின்றான், கேளா நின்றான்; கற்கா நின்றான், கல்லா நின்றான்; பிறவும் ஒட்டுக.

### நிகழ்காலத்து உம்மின் செய்கை

39. ஏனை உம்மைகுச் சாரியை யின்றி
மற்றவை தம்மில் வழங்கா தென்க.

[உ—ம்] கேட்கும், கற்கும்; இவை கேளும் கல்லும் என வழங்கா என்க.

### எதிர்கால இடைநிலைகள்

40. எதிர்வின் வகர விடைநிலை யதுதான்
செய்முதல் நகுவரை வாய்பா டாறினும்
இயல்பின் வந்தே இயங்குவ தாகும்.

[உ—ம்] செய்வான், ஆள்வான், கொல்வான், அறிவான், அஞ்சுவான், நகுவான்.

41. பகர விடைநிலை கேள்கல் லிரண்டினும்
ளலக்கள் டறவாய்த் திரிந்து நடைபெறும்.

[உ—ம்] கேட்பான், கற்பான்.

42. நிகழ்வி னும்மே போலச் செய்கையின்
எதிர் வினும்மும் எய்தும் என்க.

[4]

[உ—ம்] உண்ணும், கேட்கும். (சூத்தி 35, 39 காண்க.)

43. பார் நட விரண்டினுங் குகரச்சாரியை
தன்னொற் றிரட்டித் தானடக் கும்மே.

[உ—ம்] பார்க்கும், நடக்கும்.

## பெயரெச்ச விகுதிகள்

44. உம்மும் அகரமும் உறூஉம் பெயரெச்சத்
தெல்லா வினையொடும்; அன்னவை இயல்பாம்.

[உ—ம்] செய்யும், செய்த, செய்கின்ற.

## வினையெச்ச விகுதிகள்

45. இறப்பில் வரும்வினை யெச்ச விகுதிகள்
ஆ இ உ ஊவொடு புகரமிவ் வைந்திவை
முன்னவை போற்பெரும் பான்மையும் முடிவன.

குறிப்பு:- வினையெச்ச விகுதிகள் ஐந்து என்றது- செய்யா, அஞ்சி, செய்து, செய்யூ, செய்பு என்பவற்றின் ஈற்றெழுத்துக்களை. முன்னவை—பன்னிரு வாய்பாட்டின் செய்கைகள். பெரும்பான்மை என்றது, சாரியை பெற்றும் பெறாமலும் பிறவாறுகவும் ஏற்றபெற்றி வருதல் நோக்கி.

46. செய்தென் வாய்பாட்டு வினையெஞ்சு கிளவிக்
கெய்து மஞ்சி லிகரமே விகுதி.

குறிப்பு:- குற்றுகர முற்றுகர வீறுகவுள்ள அஞ்சு வாய் பாடு முழுதும், செய்து என்னும் வினையெச்சம் போல உகர விகுதி பெறாது, இகர விகுதியே பெறும் என்க.

47. எதிர்நிகழ் வினைகளி னெச்ச விகுதிகள்
அ இ ன் இயஇயர் ஆகுமற் றிவையும்
ஏற்ற பெற்றியி னியங்குவன வாகும்.

[உ—ம்] செய, செயின், செய்யிய, செய்யியர்.

குறிப்பு:- முன் சூத்திரக் குறிப்புக்களே இவ்விகுதிகட்கும் ஏற்றபெற்றியின் அமைவன.

## துணைவினைகள் செயல்படுமுறை

48. விடுஒழி இடுகொள் படுஇரு முதலிய
துணைவினை யிணைந்து வினைமுத லானவும்
பெயர்வினை யிணைந்து மருவி வருநவும்
பின்வரு வினையின் பெற்றிய வாகிப்
பன்னிரு பகுதியின் பாற்படு மென்க.

[உ—ம்] போய்விட்டான், செய்தொழிந்தான், உரைத்திடுகின்றான், எடுத்துக்கொண்டான், இறந்துபட்டான், எழுந்திருக்கின்றான்; இவை இணைந்த வினையின் செய்கையை ஏற்றன. அலமரு, உலமரு, பைவரு, தைவரு போல்வன அலம்வா, உலம்வா, பைவா, தைவா எனப் பெயர்களோடு இணைந்து வினைப் பகுதிகளாயின. அலம், உலம், பை என்பன மனஞ்சுழல்கை, துன்பம் எனவும், தைவரல்-தடவுதல் எனவும் பொருள்படும். இவ்வாறு வருவன வேறு சிலவும் உள. பை-துன்பங் குறித்தல், பையுள், இடும்பை முதலிய வழக்கால் உய்த்துணரப் படும்.

## பிறவினை விகுதிகள்

49. பிவி யிணையும் பிறவினைப் பகுதிகள்
பார்வாய் பாட்டின் பாற்பட் டியலும்.

[உ—ம்] நடப்பிக்கிருன், நடப்பித்தான், நடப்பிப் பான்; செய்விக்கிருன், செய்வித்தான், செய்விப்பான். இப்பிறவினை விகுதிகள் எல்லா வினைப் பகுதிகளுடனும் பெரும்பாலும் சேர்ந்து பார் வாய்பாட்டுள் அடங்குதலால் இவை அட்டவணையுள் அமைத்துக் காட்டப்பட்டில.

50. உகர மூர்ந்த வல்லெழுத் தாறும்
பிறவினை குறிக்க இணைவினை சிலவுள
அஞ்சென் வாய்பாட் டமைவன அவையே.

[உ—ம்] போ—போக்கு, பாய்—பாய்ச்சு, உருள்—உருட்டு, நட—நடத்து, எழு—எழுப்பு, பயில்—பயிற்று. எல்லா வினைப்பகுதிகளுடனும் இவ்விகுதிகள் வாரா என்பது குறிக்கச் 'சிலவுள' எனப்பட்டது.

## வினையாலணையும் பெயர்கள்

51. இருதிணை வினைப்பெயர்க் கெல்லா வினையினும்
எதிர்விடை நிலையோ டகர மியையும்.

[உ—ம்] செய்பவன், செய்பவள், செய்பவர், செய்வது, செய்வன. [வினைப்பெயர்—வினையாலணையும் பெயர்].

## விகுதியின்றித் தாமே காலங்காட்டுவன

52. றவ்வொ டுகர வும்மை நிகழ் பல்லவும்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவுமின் னேவ லெதிர்வும் பாந்தம்
இறப்பொடு வரவும் எதிர்மறை மும்மையும்
ஏற்பன வென்றே இயம்பினர் புலவர்.

[உ—ம்] சென்று (சென்றேன், செல்வேன்)
சென்றும் (சென்றேம், செல்வேம்)

வந்து (வந்தேன், வருவேன்)
வந்தும் (வந்தேம், வருவேம்)
கண்டு (கண்டேன்)
செய்மின் (செய்யுங்கள்)
என்ப (என்றார், என்பார்)
செய்யார் (முக்காலத்தும் செய்யமாட்டார்)

குறிப்பு:- இது நன்னூற் சூத்திரத்தின் அடிகளையும் தொடர்களையும் ஏற்றது.

## எதிர்மறை விகுதி

53. எதிர்மறைக் காவோ டில்அல் இடைநிலை
ஏற்கும் வினையுடன் மற்றிவை வருமே.

குறிப்பு:- "ஏற்கும் வினையுடன்" என்றதனால், காணாதான், காணான் என வினைப்பெயர் வினையெச்சங்களுக்கு ஆகாரமும், உண்ணற்க, ஏறற்க என வியங்கோளுக்கு அல் இடைச் சொல்லும் பெரும்பான்மை உரியன எனவும், ஏனைய வினைகட்கு அல்லொடு இல் லிடைச்சொல்லும் உரியவெனவும் கொள்க. உண்ணலன், உண்டிலன் என இரண்டும் வந்துள்ளமை காண்க. காணாதான் என்ற வினைப்பெயரில், விகுதிமுன் தகரம் எழுத்துப்பேறுகும்.

54. இடைநிலை யின்றி எல்லாப் பகுதியும்
தனிநெடி லடுத்த னளரம யவ்வீற்று
விகுதியோ டியையின் முற்று வினையில்
எதிர்மறைப் பொருளே இசைக்கு மென்க.

குறிப்பு:- தனிநெடிலடுத்த ன, ள, ர, ம, ய-ஈற்று விகுதிகளாவன:- ஆன், ஆள், ஆர்; ஏன், ஏம், ஓம்; ஆய், ஈர் என மூவிடத்தும் வருவன. (னகரவீற்றுள் ஆனும் ஏனும், ரகரவீற்றுள் ஆரும் ஈரும் அடங்கும்).

[உ—ம்] செய்யான், காணாள், செல்லார்; செய்யேன், சொல்லேம், அறியோம்; வணங்காய், உண்ணீர் என மூவிடங்களிலும் இடைநிலை யின்றியே எதிர்மறைப் பொருள் பயந்தன. இவற்றிடையே ஆகார எதிர்மறை யிடைநிலை புணர்ந்து கெட்டதென்பாரும் உளர். ஆய், ஈர் விகுதிகள் முன்னிலை வினைமுற்றில் எதிர்மறைப் பொருளில் வரினும், ஏவல் வினைமுற்றில் உடன்பாட்டுப் பொருளையே உணர்த்துமென்க.

## குறிப்பு வினைகள்

55. குறிப்பு வினைமேற் கூறிய தெதனையும்
ஏலா தெனவத னியல்பறிந்து கொளலே.

பொருள் வெளிப்படை.

## ஒழிபு

### இன்ன இன்ன இலக்கணமே இதுவரை கூறப்பட்டன எனல்

56. பன்னிரு வகைவாய் பாட்டினு மடங்கா
தொழிந்தவு முளவவை யொருபடி கூறின்
மூவிடத் தைம்பான் முற்றுவினை சிலவும்
வினைபெய ரெச்ச விகுதிகள் சிலவும்
அளபெடுத்து வருஉம் வினைகளுட் சிலவும்
இடையுரி யடியா மியங்கும் வினைகளும்
வினைத்திரி சொல்லென விளங்கிய சிலவும்
இன்ன பலவா மியல்வன யாவும
இடைநிலை விகுதியோ டியைவுழி யிடையே
பயிலும செய்கை பலவா மன்னவை
ஒழிபென அடக்கி யுரைத்துக் கொளலே.

குறிப்பு:- பொருள் வெளிப்படை. உதாரணங்கள் நான்முகத் திறுதியுள் ஒழிபு என்ற பகுப்பினுட் காண்க. ஈண்டுரைப்பிற் பெருகும்.

## இடைநிலை விகுதிகட்கு இடையிலுறும் செய்கைகள்

57. இடைநிலை விகுதிகட் கிடைப்படுஞ் செய்கை
தனிக்குறிற் பின்னள ரமவோடு அஐ
இறுதி இருதிணை யிடங்களின் விகுதிமுன்
அன்சா ரியைபெற லறியத் தகுமே.

குறிப்பு :- தனிக் குறிற்பின், னளரம என்றது–அன் அள் அர் என் அன் எம் அம் இர் என்ற விகுதிகளை. அ ஐ இரண்டும் தனிக்குறில் சேராமையின் ஒடுக் கொடுத்துப் பிரிக்கப்பட்டது. இவை அன் சாரியை.பெறும் எனவே நெடிற் பின்னவான ஆன் ஆள் ஆர் முதலா யின அச்சாரியை பெறா என்பதாயிற்று.

[உ–ம்] வந்தனன், வந்தனள், வந்தனர், வந்த னென், வந்தனன், வந்தனெம், வந்தனம், வந்தனிர்; வந்தன, வந்தனை என ஐம்பான் மூவிடங்களில் வருதல் காண்க.

இனி, அஃறிணை ஒருமையுள் செய்தன்று, உண் டன்று, சென்றன்று எனத் த, ட, ற எழுத்துக்கட்கும் றுவ் விகுதிக்கும் இடையில் அன் சாரியை வருதல் காண்க.*

---

* "றகர உகரம், புக்கன்று, உண்டன்று, வந்தன்று, சென் றன்று எனக் க, ட, த, ற என்பவற்றின்முன் அன் பெற்று வரும். கூயின்று, கூயிற்று போயின்று, போயிற்று என ஏனை யெழுத் தின்முன் இன் பெற்று வரும். வந்தின்று என்பதோ எனின் அஃது எதிர்மறுத்தலை உணர்த்தற்கு வந்த இல் வினது லகரம் னகரமாய்த் திரிந்த எதிர்மறை விகுதி என மறுக்க" என்பது சேனாவரையம் (தொல்-சொல்-237 உரை,)

58. இன்னோ ரன்ன பல்வகைப் புணர்ப்பும்
சொல்லிய லாகலின் தொல்காப் பியமுதல்
முன்னூல் நோக்கி முடிபுணர்ந்து கொளலே.

குறிப்பு:- பல்வகைப் புணர்ப்பும் என்றது, இடைநிலை விகுதிகட்கு இடையே நிகழும் செய்கைகள் எ-று. 'இன்னோரன்ன' என்றதனால், அஃறிணை யொருமையுள் செய்கிறது என அகரச்சாரியை பெற்றும், அஃறிணைப் பன்மையுள் செய்வ என அன்சாரியை பெற்றும் பெரும லும் முன்னிலை ஏவலுள் செய்தி, வருதிர் எனத் தகர எழுத்துப் பெற்றும், எதிர் மறையுள் காணுதான் காணுன்; காணுத, காணு என அத்தகர வெழுத்துப் பெற்றும் பெரு மலும் மற்றும் பிறவாறும் வருவன வெல்லாம் கொள்க. இடைநிலை விகுதிகட்கு இடைப்பட்ட சாரியைப் புணர்ப் புக்கள் அறியத்தக்கன வாதலின் சிறப்புடைமைபற்றி இங்குச் சிலவே கூறப்பட்டன. ஏனைய சொல்லிலக்கண விதிகளையெல்லாம் யாமும் வழிமொழிதல் மிகையாத லால், முன்னூல்கள் நோக்கி அவை உணரத்தகும் என்றவாறு.

## புறனடை

59. வினைத்திரி பமையுமிவ் விலக்கணத் திடையே
குன்றக் கூறலு மிகைபடக் கூறலும்
பிறகுறை பாடும் பெரிது மியையினும்
அன்னவை யாவும் நுண்ணிதி னுராய்ந்
தமைத்துக் கோட லறிந்தோர்க்குக் கடனே.

*வினைத்திரிபு விளக்கம்*
*முற்றும்.*

# வினைப்பகுதிகளின் விவரக் குறிப்பு.

| வாய்பாட்டு எண். | வாய்பாடு | ஈற்றெழுத்து | உதாரணம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | செய் | உ, ஐ, ய் | உழு, வை, கொய் | 9 |
| 2 | ஆள் | ள் | கொள், ஆள், இருள் | 33 |
| 3 | கொல் | ல் | கொல் அகல் | 46 |
| 4 | அறி | இ, ஐ, ய், ர், ழ் | அறி, அறை, பாய், படர், பிறழ் | 372 |
| 5 | அஞ்சு | உ | அஞ்சு, அகவு | 1210 |
| 6 | நகு | கு, டு, று | புகு, அடு, உறு | 30 |
| 7 | உண் | ண் | உண், பூண் | 4 |
| 8 | தின் | ன் | தின், ஈன் | 3 |
| 9 | கேள் | ள் | கேள், கள் | 8 |
| 10 | கல் | ல் | கல், தோல் | 6 |
| 11 | பார் | இ,உ,ஐ,ய்,ர்,ழ் | அடி, உடு, அழை, எய், வேர், சிமிழ் | 1327 |
| 12 | நட | அ ஆ | அள, அண்ணு, இறுமா | 72 |
| | | | ஆக | 3120 |

# வினைப்பகுதிகள் பற்றி அறியத்தகும் சில குறிப்புக்கள்

1. வினைப்பகுதிகள், அந்தஅந்த வாய்பாட்டின் ஈற்றெழுத்துப்படி, தனித்தனியே அகராதி வரிசையில் காட்டப்பெற்றன.

2. சில வாய்பாடுகள், மூன்று அல்லது நான்கு வினைப் பகுதிகளையே உடையன. அவை ஒழிபு என்ற வகுப்பிற் சேர்க்கக்கூடும். ஆயினும், வழக்கு மிகுதி நோக்கி அவையும் 'வினைப்பகுதி அட்டவணையுள்' தனி வாய்பாடுகளாகவே காட்டலாயின.

3. ஒவ்வொரு வாய்பாட்டு அட்டவணை முகப்பிலும் பெயரெச்சமாகவும் வினையெச்சமாகவும் எதிர்மறை யாக வும் முக்காலங்களிலும் வரும் உருவங்கள் தரப்பட்டுள. இருதிணை ஐம்பால் மூவிடங்களிலும் வரும் முற்று வினைகள், சிறப்புடைமை பற்றி, உயர்திணை ஆண்பா லொருமையில் மட்டும் காட்டப்பட்டன. ஏனைய இடம் பால்களிலும் வழங்கு மாற்றை ஒட்டிக் காண்க. இவ்வாறே வினையெச்ச விகுதிகளுள், இறந்த காலத்துக் குரிய 'செய்து' என் வாய்பாட்டு வினையுருவமே காட்டப்பட் டது. ஏனைய செய்பு செய்யூ முதலிய வாய்பாடுகளோடும் ஒட்டி, ஏற்றபெற்றி அவை கொள்ளத் தகும்.

4. வினைப் பகுதிகளை முற்காலத்தவை, இடைக் காலத்தவை, பிற்காலத்தவை என மூவகையாகப் பிரிக்க லாம். முற்காலத்தவான முதனிலைகள் இக்காலத்து வழங்கும் நிகழ்கால எதிர்கால இடைநிலைகளை ஏற்பன வல்ல. இறந்தகால இடைநிலைகளும் முன்னூல்களிற் கூறப்படவில்லையேனும், அவ் விடைநிலைகளாகத் தொல் காப்பிய முதலியவற்றில் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளதை நூன்முகத்தில் விளக்கியுள்ளேன். வினையெச்ச வுருவங் களிற் சிலவும் வினை விகற்பங்களில் அருகியன பலவும் சங்ககாலத்து நூல்களிற் பெரிதும் பயில்கின்றன. அவற் றைத் தொல்காப்பிய முதலியவற்றினின்றும் அவற்றின் பழைய உரைகளினின்றும் நாம் தெரிந்து கொள்ளலாம். அவற்றிற் பல இக்கால வழக்குடையன வல்ல. அதனால், வாய்பாட்டின் தலைப்புக்களில் இடைக்காலத்துக்கும் பிற் காலத்துக்கும் உரியனவும், இடைநிலை சாரியை விகுதி களோடு சேர்ந்தனவுமான உதாரணங்களே காட்டப் பட்டவை என்பதும் சங்க காலத்தவான வினைகள் யாவும் இவ் விடைநிலை முறைகளை ஏற்பனவாகா என்பதும் அறியத்தகும்.

5. சில சொற்கள் விற்பத்தி வெவ்வேருதல் பற்றி, தமிழ்ப் பேரகராதி(Lexicon)யுள் இரண்டாகவும் மேற்பட வும் காட்டப்பட்டுள்ளன. அவை ஒரே வினைத்திரிபு வாய் பாட்டுக்கு உட்பட்டவை யாதலால், ஒரே வாய்பாட்டில் இந் நூலுள் அவை அமைக்கப்பெற்றன.

6. சில வினைப்பகுதிகள், இரண்டு வினைத்திரிபு வாய்பாட்டுக்கு உரியன. உதாரணமாக—உருள், இருள் என்பவை உருண்ட, உருளின; இருண்ட, இருளின என முன்னூல்களில் வழங்கும். அவை அவ்வவ் வாய் பாட்டினுட் காணலாம்.

7. தமிழ்ப் பேரகராதியுள் (Tamil Lexicon) ஆரிய எழுத்துக்கள் கலந்த வினைப்பகுதிகளும் உலக வழக்கில் இல்லாத வட சொற்களும், திசைச் சொற்களில் இந்தி உருது போன்ற புறமொழிப் பதங்களும் ஒலி முதலியவை பற்றிய இரட்டைக் கிளவிகளும் மிகுதியும் தரப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவையன்றி, ஏனைய 'வினைப் பகுதி அட்டவணையுள்' விலக்கப்பட்டன.

8. இவை போல்வன வேறு சிலவும் இருத்தல் கூடும். அவற்றை வழக்கு நோக்கி ஏற்றபெற்றி அறிந்து கொள்க.

---

ஸ்ரீ :

# வினைப்பகுதி அட்டவணை

## முதலாவது

## *செய் - வாய்பாடு*

**[ உ, ஐ, ய்—ஈறுகள் ]**

*செய்கிறான், செய்தான், செய்வான், செய்த, செய்து, செய்யான்.*

| | | | | |
|---|---|---|---|---|
| தொழு | | பொரு | | கொய் |
| உழு | 5 | வை | | செய் |
| அழு | | எய் | | பெய் |

*[ஆக தொகை 9.]*

---

## இரண்டாவது

## **ஆள்** *- வாய்பாடு*

[ ள்—ஈறு ]

*ஆள்கிறான், ஆள்வான், ஆண்டு, ஆண்டான், ஆண்ட, ஆளான்.*

| | | | | |
|---|---|---|---|---|
| அரள் | 5 | உருள் | | சவள் |
| அருள் | | கறள் | 10 | சுருள் |
| ஆள் | | கீள் | | ஞெள் |
| இருள் | | கொள் | | திரள் |

திவள்
துவள்
15 தெகுள்
தெருள்
தெவிள்
தெவுள்
நகள்
20 நீள்
நொள்
பிரள்
புரள்
பேள்
25 மருள்
மாள்
மீள்
மொள்
வரள்
30 வறள்
விரள்
விள்
வெருள்

[ஆக தொகை 33.]

---

## மூன்ருவது
## கொல் - வாய்பாடு
### [ல்—ஈறு]

*கொல்கிருன், கொன்ருன், கொல்வான், கொன்ற, கொன்று, கொல்லா.*

அகல்
அமர்
அயல்
அயில்
5 அழல்
அனல்
இயல்
உயல்
உழல்
10 கஞல்
கழல்
கனல்
கால்
கீல்
15 குயில்
குழல்
கொல்
சால்
சுழல்
20 சூல்
செல்
சோல்
ஞால்
ஞரல்
25 ஞெமல்
தவல்
தழல்
துயல்
துயில்
30 துவல்
நமல்
நரல்
நவில்
நால்
35 நிரல்
நிழல்
நுவல்
பயில்
புகல்
40 பேல்
போல்
மால்
முயல்
முரல்
45 மெல்
வெல்

[ஆக தொகை 46.]

---

## நான்காவது
## அறி - வாய்பாடு

[ இ, ஈ, உ, ஐ, ய், ர், ழ்—ஈறுகள். ]

*அறிகிறான், அறிந்தான், அறிவான், அறிந்த, அறிந்து, அறியான்.*

இ—ஈறு
அணி
அரி
அவி
அழி
அளி
அறி
இடி
இரி
இழி
10 இளி
உமி
உரி
உழி
உறி
எரி
எளி
எறி
ஒசி
ஒடி
20 ஒலி
ஒழி
ஒளி
கசி
கடி
கவி
கழி
கனி
கிழி
கினி
30 குமி
குவி
குழி
குனி
சக்களி
சப்பளி
சரி
சழி
சுரி
சுழி
40 செழி
செறி
சொரி
சொறி
ஞெமி
ஞெரி
ஞெலி
தடி
தணி
தளி
50 தறி
திணி
திரி
துணி
துமி
தெரி
தெளி
தொழி
நசி
நரி
60 நலி
நளி
நிமி
நுணி
நெரி
நெறி
நொசி
நொடி
படி
பதி
70 பரி
பறி

பிகி
பிணி
பிரி
பிழி
பிறி
புரி
பொசி
பொடி
80 பொதி
பொரி
பொலி
பொழி
பொளி
மசி
மடி
மரி
மலி
மறி
90 முகி
முசி
முடி
முரி
முழி
முளி
முறி
முனி
மெலி
மொசி
100 மொழி
வசி
வடி
வதி
வரி
வலி
வழி
விசி
விடி
விரி
110 விளி
வெறி

ஈ — ஈறு

ஈ
வீ
தீ

உ — ஈறு

அறு
எழு
பகு
புகு
மிகு
120 வகு
விழு

ஐ — ஈறு

அகை
அசை
அடை
அணை
அமை
அரை
அலை
அளை
130 அறை
இசை
இடை
இணை
இயை
இரை
இழை
இறை
உகை
உடை
140 உதை
உரை
உலை
உளை
உறை
கடை
கதை
கமை
கரை
கலை
150 களை
கனை
கிளை
குடை
குதை
குமை
குலை
குழை
குறை

சடை
160 சதை
சமை
சிதை
சிறை
சுனை
தகை
தசை
தடை
ததை
தரை
170 தலை
தழை
தளை
தறை
திகை
திதை
திரை
துணை
துதை
துலை
180 துவை
துழை
துளை
துனை
தொலை
நகை
நமை
நனை
நிரை

நிலை
190 நிறை
நினை
நுகை
நுழை
நை
பசை
பறை
பிசை
பிணை
புகை
200 புதை
புரை
புளை
புனை
மலை
மறை
மனை
மிசை
மிடை
மிலை
210 முகை
முழை
முளை
முனை
வகை
வசை
வணை
வரை
வளை

வனை
220 விடை
விளை

ய் — ஈறு

ஆராய்
உய்
உராய்
ஊய்
ஏய்
ஓய்
காய்
சாய்
230 தீய்
துய்
தேய்
தொய்
தோய்
நோய்
பாய்
பிய்
புய்
மலாய்
240 மாய்
மூய்
மேய்
வாய்
விசாய்
வீராய்
வேய்

ர் — ஈறு

அசர்
அஞர்
அடர்
250 அணர்
அதிர்
அமர்
அயர்
அலர்
அவிர்
ஆர்
இமிர்
இவர்
ஈர்
260 உட்கார்
உணர்
உதிர்
உயர்
உலர்
ஊர்
எதிர்
ஏர்
ஒளிர்
ஓர்
270 கவர்
கிளர்
குதர்
குதிர்
குளிர்
கூர்
சார்
சிதர்
சுகிர்
சூர்
280 சேர்
சோர்
ஞமர்
ஞிமிர்
ஞெமிர்
ஞெளிர்
தகர்
ததர்
தவர்
தவிர்
290 தளர்
திணர்
தீர்
துடர்
துணர்
துயர்
துவர்
துளர்
தெளிர்
தேர்
300 தொடர்
நகர்
நல்கூர்
நளிர்
நிகர்
நிணர்
நிமிர்
நிவர்
நுகர்
நூர்
310 நேர்
நவிர்
நிமிர்
பகர்
பகிர்
படர்
பயிர்
பவர்
பிசிர்
பிதிர்
320 புணர்
புலர்
பூர்
பெயர்
பேர்
பொதிர்
மயர்
மல்லார்
மலர்
மலிர்
330 மிளிர்
முதிர்
வகிர்
வணர்
வளர்
வார்

விதிர்
விளர்

ழ் — ஈறு

அகழ்
அமிழ்
340 அவிழ்
ஆழ்
இகழ்
இமிழ்
உமிழ்
உறழ்
ஊழ்
கதழ்
கமழ்
கலுழ்
350 கவிழ்
கீழ்
குமிழ்
குறழ்
சமழ்
சூழ்
ஞெகிழ்
தவழ்
தாழ்
திகழ்
360 தெகிழ்
நகழ்
நிகழ்
நெகிழ்
பிறழ்
பீழ்
புகழ்
போழ்
மகிழ்
முகிழ்
370 மூழ்
வாழ்
வீழ்

*[ஆக தொகை 372.]*

---

## ஐந்தாவது

## அஞ்சு - வாய்பாடு

### குற்றுகர முற்றுகர வீறுகள்.

*அஞ்சுகிறான், அஞ்சினான், அஞ்சுவான், அஞ்சிய, அஞ்சி, அஞ்சான்.*

அஃகு
அகட்டு
அகவு
அகற்று
அசக்கு
அசர்த்து
அசாவு
அசும்பு
அஞ்சு
10 அட்டு
அடக்கு
அடங்கு
அடசு
அடுக்கு
அடைச்சு
அடைசு
அண்டு
அண்ணு
அண்பு
20 அண்மு
அணங்கு
அணவு
அணைப்பு
அணைவு

அணுகு
அத்து
அதக்கு
அதட்டு
அதம்பு
30 அதவு
அதுக்கு
அதுங்கு
அப்பு
அம்மு
அமட்டு
அமர்த்து
அமிழ்த்து
அமிழ்ந்து
அமுக்கு
40 அமுங்கு
அயக்கு
அயங்கு
அயாவு
அரக்கு
அரங்கு
அரட்டு
அரவு
அரற்று
அரறு
50 அராத்து
அராவு
அருக்கு
அருகு
அருட்டு

அருத்து
அருந்து
அரும்பு
அருவு
அருளு
60 அல்கு
அல்லாடு
அல்லு
அலக்கு
அலங்கு
அலசு
அலட்டு
அலப்பு
அலம்பு
அலர்த்து
70 அலவு
அலற்று
அலறு
அலுக்கு
அலுங்கு
அலைசு
அவாவு
அழற்று
அழுகு
அழுங்கு
80 அழுத்து
அழுந்து
அழும்பு
அள்ளு
அளவு

அளறு
அளாவு
அளுக்கு
அற்கு
அறுவு
90 அன்று
அனற்று
அனுக்கு
அனுங்கு
அனுப்பு
ஆக்கு
ஆகு
ஆங்கு
ஆட்டு
ஆடு
100 ஆர்த்து
ஆராட்டு
ஆலு
ஆவு
ஆழ்த்து
ஆற்று
ஆறு
இகலு
இங்கு
இசங்கு
110 இசப்பு
இசலு
இஞ்சு
இடறு
இடாசு

இடாப்பு
இடுக்கு
இடுகு
இடுங்கு
இணக்கு
120 இணங்கு
இணைப்பு
இணுக்கு
இணுங்கு
இயக்கு
இயங்கு
இயம்பு
இயலு
இயற்று
இரங்கு
130 இரட்டு
இரற்று
இராவு
இருட்டு
இருத்து
இருமு
இருவு
இலக்கு
இலகு
இலங்கு
140 இலிற்று
இவறு
இழிச்சு
இழிசு
இழித்து

இழுக்கு
இழுகு
இளஃகு
இளக்கு
இளகு
150 இறக்கு
இறங்கு
இறட்டு
இருஞ்சு
இருட்டு
இருவு
இறுக்கு
இறுகு
இறைஞ்சு
ஈகு
160 ஈட்டு
ஈண்டு
உக்கு
உகட்டு
உகலு
உகவு
உகளு
உச்சு
உசப்பு
உசவு
170 உசாவு
உசும்பு
உஞற்று
உட்கார்த்து
உட்கு

உடக்கு
உடற்று
உடறு
உடுத்து
உணக்கு
180 உணங்கு
உணத்து
உத்து
உதப்பு
உதம்பு
உதவு
உதறு
உந்து
உப்பு
உபுக்கு
190 உயங்கு
உயர்த்து
உயவு
உயாவு
உரசு
உரப்பு
உரவு
உரற்று
உரறு
உராய்ஞ்சு
200 உராவு
உரிஞ்சு
உரிஞு
உருக்கு
உருகு

உருங்கு
உருட்டு
உருமு
உருவு
உரைசு
210 உரைஞ்சு
உரோசு
உரோஞ்சு
உலம்பு
உலர்த்து
உலவு
உலறு
உலாஞ்சு
உலாத்து
உலாவு
220 உலுக்கு
உலுங்கு
உலுத்து
உலோவு
உவட்டு
உழக்கு
உழப்பு
உழம்பு
உழற்று
உழறு
230 உள்கு
உள்ளு
உளம்பு
உளறு
உளுக்கு
உற்கு
உறக்கு
உறகு
உறங்கு
உறட்டு
240 உறண்டு
உருவு
உறிஞ்சு
உறுத்து
உறுமு
உன்னு
ஊக்கு
ஊங்கு
ஊசு
ஊட்டு
250 ஊடு
ஊணு
ஊது
ஊம்பு
ஊழ்கு
ஊற்று
ஊறு
ஊன்று
எஃகு
எக்கு
260 எகிறு
எச்சு
எஞ்சு
எட்டு
எடுப்பு
எடுவு
எண்ணு
எத்து
எம்பு
எய்து
270 எருக்கு
எல்லு
எவ்வு
எழுது
எழுப்பு
எழும்பு
எழுவு
எள்கு
எள்ளு
எற்று
280 எறட்டு
ஏகு
ஏங்கு
ஏசு
ஏத்து
ஏந்து
ஏம்பு
ஏமாற்று
ஏமாறு
ஏவு
290 ஏற்று
ஏறு
ஒஃகு
ஒக்கு
ஒஞ்சு

ஒட்டு
ஒடுக்கு
ஒடுங்கு
ஒண்டு
ஒண்ணு
300 ஒத்து
ஒதுக்கு
ஒதுங்கு
ஒப்பு
ஒருக்கு
ஒருங்கு
ஒருவு
ஒல்கு
ஒல்லு
ஒவ்வு
310 ஒழிச்சு
ஒழுக்கு
ஒழுகு
ஒழுங்கு
ஒளிறு
ஒற்கு
ஒற்று
ஒன்று
ஒன்னு
ஓக்கு
320 ஓங்கு
ஓச்சு
ஓஞ்சு
ஓட்டு
ஓடு
ஓது
ஓப்பு
ஓம்பு
ஓராட்டு
ஓலு
330 ஔவு
கக்கு
கசக்கு
கசகு
கசங்கு
கஞற்று
கட்டு
கடத்து
கடவு
கடாசு
340 கடாவு
கடுக்கு
கடுகு
கத்து
கதலு
கதவு
கதறு
கதாவு
கதுக்கு
கதுமு
350 கதுவு
கந்து
கப்பு
கம்மு
கமறு
கயக்கு
கயங்கு
கருக்கு
கருடு
கருது
360 கருளு
கல்லு
கலக்கு
கலங்கு
கலசு
கலவு
கலாவு
கவட்டு
கவவு
கழற்று
370 கழறு
கழுமு
கழுவு
களுக்கு
கறக்கு
கறங்கு
கறும்பு
கறுவு
கன்று
கனவு
380 கனற்று
காட்டு
காது
காந்து
காய்ச்சு

காற்று
கிட்டு
கிடத்து
கிடப்பு
கிடாசு
390 கிண்டு
கித்து
கிந்து
கிரங்கு
கிருங்கு
கிலுக்கு
கிலுங்கு
கிள்ளு
கிளத்து
கிளப்பு
400 கிளம்பு
கிளர்த்து
கிளறு
கிரும்பு
கிருவு
கிறுக்கு
கிறுங்கு
கீறு
குக்கு
குணக்கு
410 குணகு
குணங்கு
குணட்டு
குணுக்கு
குணுகு

குத்து
குதப்பு
குதம்பு
குதறு
குந்து
420 கும்பு
கும்மு
குமட்டு
குமிறு
குமுக்கு
குமுங்கு
குமுறு
குயிற்று
குரங்கு
குலவு
430 குலாவு
குலுக்கு
குலுங்கு
குழகு
குழம்பு
குழற்று
குழறு
முழுமு
குளறு
440 குற்று
குறண்டு
குருவு
குறுக்கு
குறுகு
குன்று

குனகு
குனுகு
கூசு
கூட்டு
450 கூடு
கூண்டு
கூப்பு
கூம்பு
கூவு
கூறு
கூனு
கெஞ்சு
கெண்டு
கெத்து
460 கெந்து
கெம்பு
கெல்லு
கெழுமு
கெழுவு
கேது
கேரு
கேவு
கொசுவு
கொஞ்சு
470 கொட்கு
கொட்டு
கொடுகு
கொத்து
கொந்து
கொழுது

கொந்து
கொம்பு
கொழுது
கொழுந்து
கொளுத்து
கொளுந்து
480 கொளுவு
கொன்னு
கோட்டு
கோடு
கோணு
கோது
கோம்பு
கோரு
கௌவு
சங்கு
490 சண்ணி
சதாவு
சப்பு
சமட்டு
சருக்கு
சருவு
சல்லு
சலாத்து
சலாப்பு
சலாம்பு
500 சலுப்பு
சவங்கு
சவட்டு
சழூங்கு
சழுங்கு
சளப்பு
சளும்பு
சறுக்கு
சறுகு
சாட்டு
510 சாடு
சாத்து
சாப்பு
சாம்பு
சார்த்து
சாற்று
சாறு
சிக்கு
சிங்கு
சிண்டு
520 சிணுட்டு
சிணுக்கு
சிணுங்கு
சிதகு
சிதம்பு
சிதறு
சிந்து
சிம்பு
சிம்மு
சிமிட்டு
530 சிமிண்டு
சிரற்று
சிரறு
சில்கு
சிலம்பு
சிலாப்பு
சிலாவு
சிலுக்கு
சிலுப்பு
சிலும்பு
540 சிவணு
சிவிறு
சிழுகு
சிற்று
சிறும்பு
சிறுக்கு
சிறுகு
சினவு
சீடு
சீண்டு
550 சீந்து
சீப்பு
சீவு
சீறு
சுக்கு
சுட்கு
சுட்டு
சுண்டு
சுணக்கு
சுணங்கு
560 சும்பு
சுமத்து
சுரண்டு
சுருக்கு

சுருங்கு
சுருட்டு
சுலவு
சுலாவு
சுவற்று
சுவறு
570 சுழற்று
சுளுக்கு
சுற்று
சுறண்டு
சூட்டு
சூடு
சூப்பு
சூம்பு
சூழ்ந்து
சூளு
580 சூறு
செண்ணு
செத்து
செதுக்கு
செதுகு
செதும்பு
செப்பு
செம்மு
செருக்கு
செருகு
590 செருமு
செலுத்து
செவிட்டு
செற்று
செறுமு
சேந்து
சேப்பு
சேர்த்து
சொக்கு
சொட்டு
600 சொடக்கு
சொருகு
சொல்லு
சொறுண்டு
சோங்கு
சோம்பு
சோமாறு
ஞாற்று
ஞாறு
ஞெமிடு
610 ஞெமுக்கு
ஞெமுங்கு
ஞொள்கு
தக்கு
தங்கு
தட்கு
தட்டு
தடக்கு
தடங்கு
தடவு
620 தடாவு
தடுக்கு
தடுமாறு
தண்டு
தத்து
ததும்பு
தப்பு
தபுத்து
தம்பு
தயங்கு
630 தருக்கு
தருகு
தல்லு
தவ்வு
தவங்கு
தவறு
தழங்கு
தழிச்சு
தழும்பு
தழுவு
640 தள்ளு
தளம்பு
தளர்த்து
தளுக்கு
தளும்பு
தறுகு
தறுவு
தன்னு
தனகு
தாக்கு
650 தாங்கு
தாட்டு
தாண்டு
தாத்து

தாவு
தாழ்த்து
தாளு
தாற்று
திக்கு
திகழ்த்து
660 திட்கு
திட்டு
திடத்து
திண்டாடு
திணறு
திணுங்கு
தித்து
தியக்கு
தியங்கு
திரக்கு
670 திரங்கு
திரட்டு
திருக்கு
திருகு
திருத்து
திருந்து
திருப்பு
திரும்பு
திருமு
திவறு
680 திறம்பு
தீட்டு
தீண்டு
தீற்று
துஞ்சு
துட்டு
துடக்கு
துடங்கு
துரும்பு
துப்பு
690 தும்பு
தும்மு
துயக்கு
துயங்கு
துயிற்று
துரத்து
துரப்பு
துருத்து
துருந்து
துருவு
700 துலக்கு
துலங்கு
துலுங்கு
துவ்வு
துவக்கு
துவங்கு
துவட்டு
துவர்த்து
துவற்று
துவன்று
710 துழவு
துழாவு
துள்ளு
துளக்கு
துளங்கு
துளும்பு
துற்று
துறும்பு
துறுமு
துன்று
720 துன்னு
தூக்கு
தூங்கு
தூண்டு
தூரு
தூவு
தூற்று
தூறு
தெக்கு
தெகுட்டு
730 தெட்டு
தெண்டு
தெத்து
தெருட்டு
தெவ்வு
தெவிட்டு
தெவுட்டு
தெள்கு
தெள்ளு
தெற்று
740 தென்று
தென்னு
தேக்கு
தேங்கு

தேடு
தேண்டு
தேம்பு
தேலு
தேற்று
தேறு
750 தொங்கு
தொடக்கு
தொடங்கு
தொத்து
தொலைச்சு
தொளுக்கு
தொற்று
தொனப்பு
தொனுப்பு
தோண்டு
760 தோற்று
தோன்று
நக்கு
நகட்டு
நகர்த்து
நங்கு
நச்சு
நசுக்கு
நசுங்கு
நடத்து
770 நடவு
நடாத்து
நடாவு
நடுக்கு
நடுங்கு
நண்ணு
நணுகு
நணுங்கு
நத்து
நந்து
780 நம்பு
நமுகு
நமுட்டு
நமுடு
நரற்று
நராங்கு
நருக்கு
நருங்கு
நரும்பு
நருமு
790 நல்கு
நலக்கு
நலங்கு
நலுங்கு
நவ்வு
நவட்டு
நவிற்று
நவுட்டு
நழுக்கு
நழுங்கு
800 நழுப்பு
நழுவு
நளுக்கு
நறுக்கு
நறும்பு
நறுமு
நன்னு
நாங்கு
நாட்டு
நாடு
810 நாணு
நாது
நாந்து
நாப்பு
நாம்பு
நாவு
நாற்று
நாறு
நிகர்த்து
நிகழ்த்து
820 நிப்பாட்டு
நிம்பு
நிமிட்டு
நிமிடு
நிமிண்டு
நிய்த்து
நியது
நிரத்து
நிரப்பு
நிரம்பு
830 நிரவு
நிராங்கு
நிலவு
நிலாவு

நிவறு
நிழத்து
நிழற்று
நிழறு
நிற்பாட்டு
நிறுத்து
840 நிறுவு
நீக்கு
நீங்கு
நீஞ்சு
நீட்டு
நீடு
நீணு
நீந்து
நீவு
நீற்று
850 நீறு
நுக்கு
நுங்கு
நுடக்கு
நுடங்கு
நுணங்கு
நுணுசு
நுணுவு
நுணுக்கு
நுணுகு
860 நுணுங்கு
நுதம்பு
நுதலு
நுந்து

நுவறு
நுழுது
நுழுந்து
நுழுவு
நுள்ளு
நுளுப்பு
870 நுறுக்கு
நுறுங்கு
நூக்கு
நூங்கு
நூவு
நூறு
நெக்கு
நெட்டு
நெடுகு
நெண்டு
830 நெம்பு
நெரடு
நெருக்கு
நெருங்கு
நெருடு
நெருமு
நெற்று
நேடு
நேம்பு
நொக்கு
840 நொங்கு
நொண்டு
நொந்து
நொப்பு

நொம்பு
நொருக்கு
நொருங்கு
நொவ்வு
நொழுந்து
நொள்கு
850 நொறுக்கு
நொறுங்கு
நோக்கு
நோண்டு
நோம்பு
பகட்டு
பகர்த்து
பசப்பு
பஞ்சு
பண்ணு
860 பதறு
பதுக்கு
பதுங்கு
பம்பு
பம்மு
பயிற்று
பரக்கு
பரசு
பரப்பு
புரம்பு
870 பரவு
பரிமாறு
பருக்கு
பருகு

பருங்கு
பருவு
பல்கு
பலுக்கு
பலுகு
பழக்கு
880 பழகு
பழிச்சு
பழுநு
பழுனு
பள்கு
பற்று
பறண்டு
பறத்து
பறம்பு
பருண்டு
890 பன்னு
பனிற்று
பனுக்கு
பனுவு
பாடு
பாத்து
பாந்து
பாய்ச்சு
பாய்த்து
பாராட்டு
900 பாவு
பாற்று
பாறு
பிசக்கு
பிசகு
பிசங்கு
பிசறு
பிசிறு
பிசுகு
பிட்கு
910 பிடுங்கு
பிணக்கு
பிணங்கு
பிதக்கு
பிதற்று
பிதுக்கு
பிதுங்கு
பிந்து
பிரமு
பிரற்று
920 பில்கு
பிலிற்று
பிலுக்கு
பிளிறு
பிளிற்று
பிறக்கு
பிறங்கு
பிருண்டு
பின்று
பின்னு
930 பினத்து
பினற்று
பீச்சு
பீத்து
பீந்து
பீர்ச்சு
பீற்று
பீறு
புகட்டு
புகற்று
940 புகுத்து
புகுது
புணர்த்து
புதுக்கு
புதுமு
புரட்டு
புல்கு
புல்லு
புலம்பு
புலர்த்து
950 புலவு
புலாவு
புலுட்டு
புலுண்டு
புழங்கு
புழுக்கு
புழுகு
புழுங்கு
புளுகு
புருண்டு
960 பூசு
பூட்டு
பூரு
பெருக்கு

பெருகு
பெருவு
பெறுக்கு
பெறுத்து
பேசு
பேணு
970 பேந்து
பொக்கு
பொங்கு
பொசுக்கு
பொசுங்கு
பொஞ்சு
பொண்டு
பொத்து
பொதுக்கு
பொதுங்கு
980 பொதுளு
பொம்மு
பொருத்து
பொருது
பொருந்து
பொருநு
பொருமு
பொருவு
பொல்லு
பொலுகு
990 பொள்ளு
பொளுக்கு
பொன்று
போக்கு
போட்டு
போது
போற்று
மக்கு
மங்கு
மசக்கு
1000 மசகு
மசங்கு
மட்கு
மடக்கு
மடங்கு
மண்டு
மண்ணு
மதுங்கு
மயக்கு
மயங்கு
1010 மயிந்து
மருக்கு
மருட்டு
மருவு
மல்காத்து
மல்கு
மல்லாத்து
மலங்கு
மலர்த்து
மழறு
1020 மழுக்கு
மழுகு
மழுங்கு
மழுப்பு
மறுங்கு
மறுக்கு
மறுகு
மன்று
மன்னு
மாட்டு
1030 மாந்து
மாழ்கு
மாற்று
மாறு
மிகுத்து
மிஞ்சு
மிண்டு
மிலாந்து
மிலைச்சு
மிழற்று
1040 மிழுங்கு
மிறுங்கு
மினவு
மினுக்கு
மினுங்கு
மீட்டு
மீறு
முக்கு
முங்கு
முச்சு
1050 முட்டு
முடக்கு
முடங்கு
முடவு

முடுக்கு
முடுகு
முண்டு
முணக்கு
முணுக்கு
முணவு
1060 முத்து
முந்து
முயங்கு
முரண்டு
முரணு
முருக்கு
முருகு
முருங்கு
முழக்கு
முழங்கு
1070 முழவு
முழாசு
முழாவு
முழுக்கு
முழுகு
முழுங்கு
முழுசு
முழுத்து
முழுந்து
முழுவு
1080 முள்கு
முற்று
முறுக்கு
முறுகு
முறுங்கு
முன்னு
முனகு
முனங்கு
மூசு
மூஞ்சு
1090 மூட்கு
மூட்டு
மூடு
மூவு
மூழ்கு
மூழ்த்து
மெச்சு
மெட்டு
மெத்து
மெய்ச்சு
1100 மெல்கு
மெழுகு
மேவு
மொக்கு
மொசுக்கு
மொத்து
மொழச்சு
மொழுக்கு
மொழுப்பு
மோது
1110 வக்கு
வசக்கு
வட்கு
வணக்கு
வணங்கு
வதக்கு
வதங்கு
வதறு
வயக்கு
வயங்கு
1120 வரன்று
வயாவு
வருட்டு
வருடு
வருத்து
வருந்து
வருவு
வல்லு
வவ்வு
வழக்கு
1130 வழங்கு
வழட்டு
வழண்டு
வழற்று
வழுக்கு
வழுத்து
வளர்த்து
வளவு
வளாவு
வளுந்து
1140 வற்று
வறட்டு
வறண்டு
வறுகு

வாக்கு
வாங்கு
வாட்டு
வாடு
வாத்து
வாது
வாரு
1150 வாழ்த்து
விக்கு
விங்கு
விச்சு
விசிறு
விசுக்கு
விசும்பு
விஞ்சு
வித்து
விதறு
1160 விதும்பு
விம்மு
விரசு
விரட்டு
விரவு
விராவு
விரும்பு
விலக்கு
விலகு
விலங்கு
1170 விலத்து
விலவு
விலாசு
விழுங்கு
விளக்கு
விளங்கு
விளத்து
விளம்பு
விளரு
விளவு
1180 விளாசு
விளாவு
விளையாடு
விறலு
விருண்டு
வினவு
வினைவு
வீக்கு
வீங்கு
வீசு
1190 வீசேறு
வீட்டு
வீடு
வீழ்த்து
வீறு
வெஃகு
வெகுட்டு
வெட்டு
வெண்டு
வெதுக்கு
1200 வெதுப்பு
வெதும்பு
வெம்பு
வெருட்டு
வெருவு
வெள்கு
வெளிறு
வேங்கு
வேண்டு
வைகு
1210 வௌவு

*[ஆ தொகை 1210.]*

## ஆறாவது

### நகு - வாய்பாடு

[கு, டு, று—ஈறுகள்.]

நகுகிறான், நக்கான், நகுவான், நக்க, நக்கு, நகான்.

அடு
அறு
இகு
இடு
5 இறு
உகு
உறு
ஏமுறு
கடு
10 குறு
கெடு
சுடு
செறு
தடு
15 தறு
துறு
தெறு
தொகு
தொடு
20 நகு
நடு
நெகு
படு
புகு
25 பெறு
மிகு
விடு
வீரிடு
வீறிடு
30 வேசறு

[ஆக தொகை 30.]

---

## ஏழாவது

### உண் - வாய்பாடு

[ண்—ஈறு.]

உண்கிறான், உண்டான், உண்பான், உண்ட, உண்டு, உண்ணான்.

1 உண்
2 பூண்
3 மாண்
4 முரண்

[ஆக தொகை 4.]

---

## எட்டாவது

## தின் - வாய்பாடு

[ன் — ஈறு]

தின்கிறான், தின்றான், தின்பான், தின்ற, தின்று, தின்னான்.

1 ஈன்
2 தின்
3 நோன்

[ஆக தொகை 3.]

---

## ஒன்பதாவது

## கேள் - வாய்பாடு

[ள் — ஈறு]

கேட்கிறான், கேட்டான், கேட்பான், கேட்ட, கேட்டு, கேளான்.

1 கள்
கேள்
தள்
தெள்
5 தோள்
பெள்
மீள்
வேள்

[ஆக தொகை 8.]

---

## பத்தாவது

## கல் - வாய்பாடு

[ல் — ஈறு]

கற்கிறான், கற்றான், கற்பான், கற்ற, கற்று, கல்லான்.

1 கல்
கில்
தோல்
நூல்
5 நோல்
வில்

[ஆக தொகை 6.]

---

## பதினொன்றாவது

## பார் - வாய்பாடு

[அ ஆ இ ஈ உ ஊ ஐ ஒ ய் ர் ழ்—ஈறுகள்]

*பார்க்கிறான், பார்த்தான், பார்ப்பான், பார்த்த, பார்த்து, பாரான்.*

அ — ஈறு

உர
கசகச
கடகட
கலகல
சடபுட
சதசத
சிர
தடதட
தடபட
10 தளதள
தறதற
நம
நய
நிற
நொளநொள
பசபச
படபட
பரபர
பல
20 மசமச
மர
மளமள
மொரமொர
வல
வழவழ
வளவள
வெலவெல

ஆ — ஈறு

உளுக்கா
கா
30 பா.
பாதுகா
பையா
யா

இ — ஈறு

அகங்கரி
அகலி
அங்கீகரி
அங்குரி
அசி*
அஞ்சலி
40 அஞ்சி
அடி
அண்ணி
அத்தமி
அதி
அதிகரி
அதிசயி
அதிசரி
அதிட்டி
அதிதேசி
50 அந்தரி
அந்தாதி
அந்தி
அப்பளி
அப்பியசி
அபகரி
அபிநயி
அபிமானி
அபேட்சி
அர்ப்பி
60 அரணி
அரவி
அராகி
அரி
அரிட்டி
அருக்களி
அருச்சி

*அசி—அரி (சீவக. 659.)

அருத்தி
அரும்பி
அலக்கழி
70 அலங்கரி
அலங்காரி
அலப்பாரி
அவ்வி
அவி
அழி
அளி
அன்னுவயி
அனுதரி
அனுக்கிரகி
80 அனுகூலி
அனுசரி
அனுட்டி
அனுபவி
அனுமதி
அனுமானி
அனுவதி
அனுவாதி
ஆக்கிரமி
ஆக்கிராணி
90 ஆகரி
ஆகுலி
ஆசங்கி
ஆசமி
ஆசரி
ஆசி
ஆசிரயி

ஆசீர்வதி
ஆக்ஞாபி
ஆட்சேபி
100 ஆதரி
ஆமோதி
ஆரம்பி
ஆரவாரி
ஆராதி
ஆரி
ஆரோபி
ஆலாபி
ஆலோசி
ஆவரி
110 ஆவலி
ஆவளி
ஆவாகி
ஆவி
ஆழி
ஆனந்தி
இச்சி
இசி
இலபி
இடி
120 இமிசி
இயந்திரி
இரசி
இரட்சி
இரட்டி
இரதி
இரமி

இரி
இரேசி
இலக்கி
130 இலங்கி
இலச்சி
இலயி
இலேகி
இலைச்சி
இவரி
இழி
இளி
இனி
ஈரி
140 உகரி
உங்கரி
உச்சீவி
உசிப்பி
உசிலி
உட்டணி
உடக்கரி
உடற்கரி
உத்தரி
உத்தியோகி
150 உத்தூளி
உத்தேசி
உதகரி
உதாகரி
உதி
உபக்கிரமி
உபகரி

உபசரி
உபதேசி
உபயோகி
160 உபவசி
உபாசி
உபாதி
உபேட்சி
உமி
உரி
உருசி
உருமி
உருவகி
உரூபி
170 உரூபிகரி
உரோசி
உலவி
உலோபி
உவட்டி
உவமி
உற்பவி
உறுவி
ஊட்டி
ஊழலி
180 உத்தரி
உதாசனி
உபநியசி
உல்லங்கி
உற்கரி
எக்கரி
எச்சரி
எஞ்சலி
எண்பி
எத்தனி
190 எந்திரி
எரி
எளி
எற்றி
எறி
என்பி
ஏம்பலி
ஏற்பி
200 ஒக்கலி
ஓச்சி
ஓசி
ஒஞ்சரி
ஒஞ்சி
ஒடி
ஒப்பாரி
ஒப்பி
ஒப்புவி
ஒரி
210 ஒருக்கணி
ஒருக்களி
ஒருமி
ஒலி
ஒழி
ஒளி
ஒற்றி
ஒன்றி
ஓக்கலி
ஓக்காளி
220 ஓங்காரி
ஓமி
ஓர்மி
ஔவி
கடாட்சி
கடி
கண்காணி
கண்டி
கணி
கணிசி
230 கத்தரி
கதி
கந்தி
கப்பி
கபளீகரி
கம்பி
கம்பீரி
கமி
கர்ச்சி
கர்வி
240 கரி
கருச்சி
கருடி
கலகி
கலவரி
கலாப்பி
கலாபி
கலி
கவசி

கவி
250 கழி
களி
கற்பி
கறைக்கணி
கனி
காதலி
காமி
காலி
கிரகி
கிரீடி
260 கிலேசி
கிரி
கிழி
கீர்த்தி
குச்சரி
குஞ்சி
குடி
குணி
குதி
குதூகலி
270 கும்பி
கும்மலி
குமி
குமிட்டி
குமிழி
குருப்பி
குருமி
குவி
குழி
குளி
280 குறி
குனி
கூடலி
கெக்கரி
கெக்கலி
கெக்களி
கெட்டி
கெடி
கெண்டி
கெந்தி
290 கெம்பளி
கெம்பீரி
கெமி
கெமிளி
கெர்ச்சி
கெலி
கேந்திரி
கொக்கரி
கொதி
கொந்தளி
300 கொந்தாளி
கொப்பளி
கொப்புளி
கொறி
கொன்னி
கோசரி
கோடி
கோடீகரி
கோதுவி
கோபி
310 சக்களி
சகளீகரி
சகாரி
சகி
சங்கரி
சங்கற்பி
சங்கி
சங்கிரகி
சங்கிரமி
சஞ்சரி
320 சட்டி
சண்ணி
சத்தி
சதி
சதுரி
சந்தி
சந்தேகி
சந்தோஷி
சந்தியசி
சப்பளி
330 சபி
சம்சாயி
சம்படி
சம்பந்தி
சம்பவி
சம்பாதி
சம்பாஷி
சம்பிரமி
சம்மதி

சம்ரட்சி
340 சமகரி
சமர்த்தி
சமர்ப்பி
சமழ்
சமனி
சமாய்
சமாளி
சமி
சமீபி
சயனி
350 சயி
சர்த்தி
சரி
சல்லரி
சல்லாபி
சலி
சவக்களி
சவதரி
சவர்க்களி
சவி
360 சவுக்களி
சளி
சற்கரி
சன்னியாசி
சன்னி
சனி
சாடி
சாதாளி
சாதி

சாவி
370 சானி
சிட்சி
சித்தாரி
சித்தி
சித்திரி
சிந்தி
சிந்துரி
சிம்பிளி
சிமாளி
சிமிளி
380 சிரி
சிருட்டி
சிரை
சிலமி
சிலாகி
சிலேடி
சிறக்கணி
சிறங்கணி
சிறங்கி
சிருங்கணி
390 சிருங்கி
சிரும்பி
சிறுப்பி
சினேகி
சீனி
சீரணி
சீரி
சீலி
சீவி

சுண்ணி
400 சுத்தி
சுத்திகரி
சுதந்தரி
சுதாரி
சும்பி
சும்புளி
சுரி
சுவடி
சுவலி
சுவாசி
410 சுவாலி
சுவீகரி
சுள்ளாப்பி
சுளி
சூக்குமி
சூசி
சூசிப்பி
சூத்திரி
சூரணி
செங்காரி
420 செடி
செந்தலி
செந்தளி
செந்தூரி
செபி
செம்பளி
செமி
செயி
செரி

செரிப்பி
430 செவி
செழி
செறி
சென்மி
செனி
சேக்கரி
சேகரி
சேட்டி
சேடி
சேதி
440 சேமி
சேவி
சையோகி
சொரிமி
சொரூபிகரி
சொலி
சோகி
சோசி
சோடி
சோதி
450 சோபி
சோஷி
சந்தோஷி
ஞாபி
ஞெமிரி
தகனி
தகி
தகிலி
தங்கரி
தடாரி
460 தடி
தண்டி
தணி
தத்தளி
தப்பி
தபி
தம்பி
தமரி
தமி
தரங்கி
470 தரி
தரிசி
தருக்கி
தரும்பி
தருவி
தவதாயி
தவாளி
தவி
தளி
தற்காலி
480 தற்கி
தற்பி
தறி
தனி
தாக்கணி
தாகி
தாடி
தாணி
தாபரி
தாபி
490 தாமசி
தாமதி
தார்க்கணி
தார்க்காணி
தாரணி
தாரி
தாவரி
தாவி
தாளி
திக்கரி
500 திட்டி
திணி
தித்தி
திதி
தியானி
திரஸ்கரி
திரி
திருட்டி
திரோதி
திறப்பி
510 திட்சி
தீர்மானி
தீவிரி
துக்கி
துஞ்சரி
துடி
துண்டி
துணி
துணிகரி

துதி
520 துமி
துவந்தி
துவரி
துவனி
துவாளி
துவேஷி
துளி
துன்மி
துனி
தூணி
530 தூலி
தூளி
தூஷி
தெண்டி
தெரி
தெரிசி
தெரிவி
தெழி
தெளி
தெறி
540 தொந்தரி
தொந்தி
தொலி
தொழி
தொனி
தோத்திரி
தோஷி
நக்கரி
நசி
நமக்கரி
550 நமற்கரி
நயப்பி
நர்கலி
நர்வலி
நரி
நலி
நவி
நளிர்வி
நாசி
நாணி
560 நிக்கிரகி
நிச்சயி
நிச்சி
நிடேதி
நிண்ணயி
நிண்ணி
நித்திரி
நிதானி
நிந்தி
நியசி
570 நியதி
நியமி
நியோகி
நிர்ணயி
நிர்வகி
நிரசி
நிராகரி
நிருமி
நிரூபி
நிவிர்த்தி
580 நிவேதி
நிஷேதி
நீட்டி
நீடி
நீளி
நுனி
நுதி
நுணி
நெடி
நெரி
590 நெறி
நேசி
நேதி
நேமி
நைவேதி
நொசி
நொடி
நொதி
நிகமி
நிரந்தரி
600 நுனி
நெறி
பக்கி
பகிஷ்கமி
பகிஷ்கரி
பங்கி
பசி
பசு
பஞ்சரி

பஞ்சலி
660 பஞ்சீகரி
பட்சி
படி
பணி
பதி
பதிட்டி
பதுப்பி
பந்தி
பரதவி
பரமபதி
670 பராக்கிரமி
பராபரி
பராமரி
பராமரிசி
பரி
பரிக்கிரகி
பரிகரி
பரிசயி
பரிசி
பரிட்சி
680 பரிணமி
பரிதபி
பரிபவி
பரிபாலி
பரிமளி
பரிவேட்டி
பரிஷ்கரி
பருப்பி
பருமி
பலி
690 பவி
பழி
பறி
பனி
பாகி
பாடி
பாணி
பாதி
பாரி
பாலி
700 பாவி
பானி
பிங்களி
பிடி
பிடிப்பி
பிண்டி
பிணி
பிந்தாரி
பிரகரி
பிரகாசி
710 பிரசங்கி
பிரசவி
பிரசாதி
பிரத்தரி
பிரதிகூலி
பிரதிட்டி
பிரதிபலி
பிரதிபிம்பி
பிரதிவிம்பி
பிரமாணி
720 பிரமி
பிரயோகி
பிரலாபி
பிரவகி
பிரவர்த்தி
பிரவாகி
பிரவேசி
பிரஸ்தாபி
பிராணி
பிரார்த்தி
730 பிரி
பிரேரி
பிற்காலி
பிறக்கணி
பிறி
பீடி
பீழி
புசி
புட்பி
புதுப்பி
740 புரஸ்கரி
புரி
புரிப்பி
புரோக்கி
புரோட்சி
புளகி
புளி
புறக்கணி
புஷ்பி

பூசி
750 பூணி
பூரி
பூலி
பூவி
பூஷி
பேகணி
பேடி
பேதலி
பேதி
பேழ்கணி
760 பொக்குளி
பொசி
பொட்டி
பொடி
பொரி
பொரி பொரி
பொளி
பொறி
போகி
போதி
780 போவி
போஷி
மக்களி
மசி
மட்டி
மடலி
மடி
மண்டலி
மதாளி
மதி
790 மதுரி
மந்தாரி
மந்தி
மந்திரி
மர்த்தி
மரணி
மரி
மழி
மற்சரி
மறி
800 மறுக்களி
மறுகலி
மறுதலி
மறுதளி
மன்னி
மானி
மிடி
மிதி
மின்னலி
முக்குளி
810 முகி
முகுளி
முசி
முடி
முண்டி
முத்திரி
மும்முரி
முரி
முழி
முளி
820 முந்றி
முறி
முறுவலி
மூர்ச்சி
மூர்த்தீகரி
மூரலி
மெய்ப்பி
மொக்குளி
மொசி
மொட்டி
830 மோகரி
மோசி
யாசி
யாபி
யூகி
யோகி
யோசி
ரமி
ரசி
ருசி
840 ரூபி
லச்சி
லபி
லிபி
லோபி
வக்கணி
வக்கரி
வக்காணி
வக்காளி

வக்கிணி
850 வக்குரி
வகி
வசனி
வசி
வசீகரி
வசூலி
வஞ்சி
வட்டி
வடி
வண்ணி
860 வத்தி
வதி
வந்தி
வயிரி
வர்ச்சி
வர்த்தி
வர்மி
வரி
வருடி
870 வருணி
வருத்தி
வருவி
வருஷி
வலி
வழி
வன்மி
வன்னி
வாஞ்சி
வாணி
880 வாதி
வாந்தி
வாரி
வாழ்வி
விகண்டி
விகரி
விகற்பி
விங்களி
விச்சிரமி
விசனி
890 விசாரி
விசாலி
விசி
விசுவசி
விசேடி
விடயி
வித்தரி
விதனி
விதானி
விதி
900 விம்பி
வியபிசரி
வியலி
வியாகுலி
வியாபரி
விரி
விரேசி
விரோதி
விலாவி
விவகரி
910 விவரி
விவாதி
விழி
விளம்பி
விளி
விளைவி
விறுமி
வீதி
வெக்களி
வெக்காளி
920 வெகுமதி
வெகுமானி
வெங்காரி
வெடி
வெந்தி
வெளி
வெறி
வேகி
வேதி
வேபி

ஈ—ஈறு

930 சீ
தீ
நீ

உ - ஈறு

அடு
அருவரு
அலு
அறு
இகு

இழு
இறு
940 உகு
உடு
உரு
உழு
உளு
எடு
ஒறு
ஓறு
கடு
கடுகடு
950 கடுகுடு
கழுகுழு
கறுகறு
கிடுகிடு
குடுகுடு
குணுகுணு
குதுகுது
குழுகுழு
குரு
குலுகுலு
960 குறு
குறுகுறு
கொடு
கொலுகொலு
கொழு
கொளுகொளு
கொறுகொறு
சவு
சாட்டு
சிடுசிடு
970 சிலு
சிலுசிலு
சிளுசிளு
சிளுபுளு
சிறு
சுருசுரு
சுறுசுறு
செகு
செது
செரு
980 செழுசெழு
செறு
தடு
தடுபுடு
தழு
தழுதழு
திடுதிடு
திறுதிறு
துகு
துருதுரு
990 துறு
தெறு
தொகு
தொடு
தொணுதொணு
நசுநசு
நசுபிசு
நடு
நது
நழு
1000 நருநரு
நருபிரு
நழுநழு
நளுநொளு
நறுமுறு
நுது
நெடு
நெருநெரு
நெறுநெறு
நெறுமு
1010 நொடு
நொது
நொதுநொது
நொருநொரு
நொளுநொளு
நொறுநொறு
பகு
படு
பரு
பிசுபிசு
1020 புகு
புழு
பெரு
பொகு
பொசுபொசு
பொடுபொடு
பொது
பொருபொரு

பொறு
மடு
1030 மறு
மிகு
மிடுமிடு
மிணுமிணு
மினுமினு
முசுமுசு
முருமுரு
முழு
முறுமுறு
மெதுமெது
1040 மெழுமெழு
மொசுமொசு
மொடுமொடு
மொருமொரு
மொலுமொலு
மொறுமொறு
வகு
வலு
வறு
வன்புறு
1050 விகு
வீடு
விதுவிது
விருவிரு
விழு
விறுவிறு
வெகு
வெடுவெடு
வெளு
வெளுவெளு
1060 வேங்கு

ஔ - ஈறு

பூ
மூ

ஐ - ஈறு

அகை
அசை
அடை
அணை
அதை
அமை
அரை
1070 அலை
அவை
அழை
இசை
இணை
இமை
இயை
இரை
இலை
இழை
1080 இறை
இனை
உகை
உடை
உதை
உமை
உரை
உலை
உழை
உளை
1090 கதை
கம்பலை
கமை
கரை
கலை
கவை
களை
கிடை
கிளை
குதை
1100 குமை
குலை
குழை
குறை
கை
சடை
சதை
சமை
சரை
சவை
1110 சளை
சிதை
சிலை
சிறை
சினை
சுணை

சுவை
சுனை
தகை
தசை
1120 தடை
ததை
தழை
தளை
திகை
திசை
திமை
திரை
திளை
துகை
1130 துடை
துணை
துதை
துலை
துவை
துளை
தை
தொலை
தொளை
நகை
1140 நமை
நரை
நவை
நணை
நிமை
நிரை
நிலை
நிறை
நினை
நுகை
1150 நுணை
நுரை
நுழை
நை
பகை
பசை
படை
பணை
பதை
பறை
1160 பிணை
பிழை
புகை
புடை
புணை
புதை
புரை
புழை
பை
மலை
1170 மழை
மறை
மிகை
மிலை
மிறை
முகை
முழை
முளை
முறை
முனை
1180 மை
வசை
வணை
வதை
வளை
விசை
விடை
விண் விணை
விதை
விரை
1190 விளை
விறை
வை
ஓ — ஈறு
கோ
ய் — ஈறு
அங்கலாய்
இருய்
உடாய்
உய்
எய்
ஏய்
1200 கலாய்
காய்
கிடுகிடாய்
கிராய்

கிலாய்
கேடாய்
சடாய்
சணாய்
சத்தாய்
சமாய்
1210 சமுதாய்
சாய்
சிராய்
சிருய்
சீய்
சுதராய்
தடாய்
தயாய்
தீய்
துய்
1220 தேய்
தோய்
நெய்
நோய்
பிய்
புய்
பூய்
பொய்
மாய்
மெய்
1230 மேய்
மொய்
வாய்
விடாய்
வேய்
ஜமாய்

ர் - ஈறு

அசிர்
அடர்
அதிர்
அமர்
1240 அயர்
அயிர்
ஆர்
இவிர்
ஈர்
உதிர்
உயர்
உயிர்
உவர்
ஊர்
1250 எதிர்
ஏர்
ஒளிர்
ஓர்
கதிர்
கவர்
கார்
கூர்
கோர்
சதிர்
1260 சதுர்
சமர்
சிதர்
சிலிர்
சீர்
சூர்
செயிர்
சேர்
சோர்
ஞெமிர்
1270 தகர்
ததர்
தவிர்
தளிர்
திணர்
திமிர்
தீர்
துணர்
துவர்
துளிர்
1280 தூர்
தெளிர்
தேர்
தோர்
நமர்
நீர்
நூர்
நேர்
பதர்
பயிர்
1290 பார்
பிதிர்
பிளிர்

புணர்
பூர்
பெயர்
பேர்
பையர்
பொதிர்
போர்
1300 மலர்
மிளிர்
வயிர்
வளர்
வார்
விதிர்
விதிர்விதிர்
விம்முயிர்
வியர்
விளர்
1310 வெதிர்
வெயர்
வெள்விளர்
வேர்
ழ் — ஈறு
அவிழ்
இமிழ்
ஊழ்
கவிழ்
காழ்
குமிழ்
1320 கூழ்
சமழ்
சிமிழ்
தாழ்
நவிழ்
நெகிழ்
முகிழ்
மூழ்

[ஆ தொகை 1327.]

---

## பன்னிரண்டாவது

## நட - வாய்பாடு

### [அ, ஆ, ஒ—ஈறு]

*நடக்கிறான், நடந்தான், நடப்பான், நடந்த, நடந்து, நடவா.*

அ — ஈறு
அண
அல
அலமல
அள
5 இக
இட
இய
இர
இரு
10 இழ
இற
உக
உல
உவ
15 உற
கச
கட
கய
கர
20 கற
கிட
கிள
குற
சிற
25 சும
சுற

செவ
தண
தவ
30 திற
துர
துழ
துற
பச
35 பய
பர
பற
பிள
பிற
40 புய
புர
புல
தல
நட
45 நிர
நிவ
மற
மித
வல
50 வற
வித
விய
விற

*ஆ — ஈறு

அண்ணா
55 அல்லா
ஆழா
இறுமா
ஏமா
சிம்மா
60 செம்மா
தண்ணா
தொண்ணா
பொச்சா
மல்கா
65 மல்லா
மாழா
மேலா
மையா
மோறா
70 விம்மா
விழுமா

ஓ — ஈறு

மோ

[ஆ தொகை 72.]

---

*அண்ணா முதலிய ஆகாரவீறுகள் அண்ணம்+ஆர்த்தல், அல்லல்+ஆர்த்தல் என்றவாறு பெயர்களோடு இணைந்தவையாயினும், ஒருவினை போல நடத்தலின், நடவாய்பாட்டுள் சேர்க்கப்பட்டன. இவற்றுட் சில பகுதிகளின் அடியான பெயர்ச் சொற்களுக்குப் பொருள் தெளிவில்லை.



விஜயா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை—'58.